


# The Trumpet of the Seventh Angel

# ஏழாம் தூதனின் எக்காளம்



1879-1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 10, இதழ் - 5 செப்டம்பர் - அக்டோபர் 2024

R4780

## ONE SACRIFICE SUFFICIENT
## ஒரே பலி போதுமானது

"அவர் பிரதான ஆசாரியர்களைப் போல முன்பு சொந்த பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் நாடோறும் பலியிட வேண்டுவதில்லை; ஏனெனில் தம்மைத் தாமே பலியிட்டதினாலே அதை ஒரே தரம் செய்து முடித்தார்." எபிரேயர் 7:27

இந்த பலியை செலுத்துவதில் எந்த வகையில் சபையின் அடையாளம் காணப்படுகிறது என்று கேட்கப்படுகிறது.

அப்போஸ்தலருடைய கருத்தை பெறுவதற்கு இவைகளில் ஒரு கருத்தை ஏற்றுக்கொள்ள நாம் வலியுறுத்தப்படுகிறோம். இதில் பிரதான ஆசாரியன் என்பது அவரது சரீரத்தை தவிர்த்து நமது கர்த்தராகிய இயேசுவை மாத்திரம் குறிப்பிடுகிறது அல்லது இது அவரது சரீரத்தை தவிர்த்து நமது கர்த்தராகிய இயேசுவை மாத்திரம் குறிக்காது.

இன்னொரு இடத்தில் தேவன் சபையை முன்னறிந்திருக்கிறார் என்று அப்போஸ்தலர் நமக்கு கூறுகிறார். ஆகையால் தெய்வீக திட்டத்தில் அது முன்னறியப்பட்டது. அதாவது ஒரு சபையானது பாவிகளிடமிருந்து தெரிந்துகொள்ளப்பட வேண்டும் என்பதும் அதற்கு இயேசுவே தலையாக இருக்க வேண்டும் என்பதும் தெய்வீக திட்டம். தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமா-யிருப்பதற்கு, உலகத் தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மை தெரிந்து கொண்டபடியே "நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய் தமக்கு சுவிகார புத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்." (எபேசியர் 1:4,6) வேறு ஒரு கருத்தை எடுப்போமானால், வேத வாக்கியங்களைப் பொருத்தவரை குருட்டுத்தனத்தை குறிப்பிடும். இந்த காரணத்திற்காக நாம் பார்க்கிற இந்த வசனத்தில் பிரதான ஆசாரியன் என்பது தலையும் சரீரமும் சேர்ந்த முழு ஆசாரியனை பரிசுத்த பவுல் குறிப்பிடுகிறார் என்று நாங்கள் நினைக்கிறோம்.

திட்டத்தின் இந்த அம்சம் சுவிசேஷ யுகம் முடிவு வரை வெளிப்படுத்தப்படாமல் இருந்தாலும், அப்போஸ்தலர் யுக மாற்றத்தைக் குறித்தும், ஆசாரிப்புக் கூடாரத்தைப் பற்றிய அனைத்தும் மற்றும் மகா பரிசுத்தஸ்தலமும், சுவிசேஷ யுகத்தின் மேலான பலிகளுக்கு இடங்கொடுக்கும்படியாக நீங்கிப் போகின்றன என்றும் அந்த காரியங்களுக்கு பதிலாக இந்த காரியங்கள் வருகின்றன என்றும் கூறுகிறார். அப்போஸ்தலர் நியாயப்படுத்துவது இதைத்தான். ஆகையால் பிரதான ஆசாரியனைக் குறித்து அவர் பேசும் போது "ஒரே தரம் செய்து முடித்தார்" என்று கூறுகிறார். அதாவது ஒரே பலியின் இரண்டு பாகங்களை அவர் குறிப்பிடுகிறார். ஆசாரியன் ஒரு பலியின் ஒரு பாகத்தை மட்டுமே செலுத்தாமல், ஆசாரியன் முதலாவது நிழலான காளையையும் அதன்பிறகு நிழலான ஆட்டுக்கடாவையும் செலுத்தினார் என்று குறிப்பிடுகிறார்.

நிழலில் இவைகள் ஒவ்வொரு வருடமும் செய்யப்படுகின்றன. ஆனால் நிழலைக் காட்டிலும் பெரியதும், உண்மையிலேயே பாவத்தை நீக்கக்கூடியதுமான உண்மைப் பொருளில், ஒரே தரம் செய்து முடித்தார். ஒவ்வொரு வருடமும் இதை செய்வதற்குப் பதிலாக, நிழலான பாவ நிவாரண நாளின் பலிகளைப் பற்றி குறிப்பிடப்பட்டது போல, மகா பிரதான ஆசாரியன், தமது சரீர அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களின் சார்பாக உண்மைப் பொருளான காளையையும் அதன்பிறகு உலக மனுக்குலத்தின் சார்பாக உண்மைப் பொருளான ஆட்டுக்கடாவையும் பலியாகக் கொடுத்தார்.

இதன் இரண்டாம் பாகம் இன்னும் நிறைவேற்றப் படவில்லை என்பதையும் நாம் காண்கிறோம். அதுவும் நிறைவேறின பிறகு நீண்ட காலமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மகிமை வரும்-"கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளும் அவைகளுக்கு பின்வரும் மகிமைகளும்." (1பேதுரு 1:11) மறுபடியும் "இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல." (ரோமர் 8:18)

R4780

## INTERESTING QUESTIONS
## ஆவலைத் தூண்டும் கேள்விகள்

**கேள்வி :** கீழே கொடுக்கப்பட்டுள்ள வசனத்தின் விசேஷமாக அதன் பின்பகுதியை தயவு செய்து விளக்கவும்: "எல்லாரையும் மீட்கும் பொருளாக தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே." (1தீமோத்தேயு 2:6)

**பதில் :** நமது கர்த்தர் தம்மையே எல்லாருக்குமான மீட்கும் பொருளாக, சரிசமமான விலைக்கிரயத்தைக் கொடுத்தார். இந்த விலைக்கிரயம் ஏற்ற சமயத்தில் பிரயோகிக்கப்படும். சபையானது பாவத்திலிருந்து திரும்பி, கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் நடப்பதினிமித்தமாக, தற்காலத்தில் அதற்கு இந்த விலைக்கிரயம் சாட்டப்படுதலின் மூலம் உபயோகிக்கப்படுகிறது. அடுத்து இதன் உபயோகம், சாட்டுதல் மூலமாக அல்ல, உலகத்திற்கு உண்மையாகவே கொடுத்தல் மூலமாக ஆகும். மத்தியஸ்த ஆளுகையின் ஆயிர வருட யுகத்தில் அவர்களது அபூரணத்திலிருந்து அவர்களை வெளியேற்றி, ஆதாம் விழுந்துபோவதற்கு முன் தேவனோடு ஐக்கியமாயிருந்த நிலைமைக்கு கொண்டு வரப்படுவார்கள்.

"மனுஷனாகிய கிறிஸ்து இயேசு" என்ற சொற்றொடர் மனுஷனாக அந்த குறிப்பிட்ட நிலைமையில் தம்மை ஒப்புக் கொடுத்ததை குறிக்கிறது என்று நாம் கூறலாம். கல்வாரியில் தம்மை ஒப்புக் கொடுத்ததின் மூலம் நிறைவேற்றி முடித்த அபிஷேகம் பண்ணப்பட்ட மனுஷனாகிய அவரே, "தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தராக" தேவனுக்கும் உலக மனுக்குலத்திற்கும் மத்தியஸ்தராக இருக்கிறார். தெய்வீக திட்டத்திற்கு இசைவாக, இந்த யுகத்தில், அவர் மனுக்குலத்தை உயர்த்தும் வேலைக்கு முன்னர், பிதாவானவர் நியமித்திருக்கிற வேறொரு வேலையை அவர் செய்து கொண்டிருக்கிறார். அதாவது "இரட்சிப்பின் அதிபதியாக" யாருக்கு வைக்கப்பட்டிக்கிறாரோ, அந்த சகோதரர்களை தெரிந்தெடுக்கும் வேலையை செய்து கொண்டிருக்கிறார். இவர்கள் மேசியா தலையாக இருக்கக்கூடிய அவரது சரீர அங்கங்களாக எண்ணப்படுகிறார்கள். அவர்கள் "அவருடைய சரீரமாகிய சபை" என்று அழைக்கப்படுகிறார்கள்.

ஆகையால் மனிதனாகிய கிறிஸ்து இயேசு உலகத்தின் இரட்சகர். இடைப்பட்ட காலத்தில், மேலே குறிப்பிட்டபடி, உலகத்திற்கு தமது பலியின் புண்ணியத்தை பிரயோகிக்கும் முன்பு, கேட்கிறவர்களுக்கும் காது உள்ளவர்களுக்கும் அவருக்கு உடன்சுதந்தரராக இருக்கப்போகிற சிலருக்கும் சாட்சி கொடுக்கப்படுகிறது. இவர்கள் ஆயிர வருட அரசாட்சியில் தேவனுக்கும் மனிதருக்கும் இடையே தீர்க்கதரிசியாக, ஆசாரியராக, மத்தியஸ்தராக, ராஜாவாக, அவருடன் இணைந்திருப்பார்கள்.

**கேள்வி :** ஆதாம் பாவம் செய்த பிறகு யூதர்களோடு தேவன் செய்த நியாயப்பிரமாண உடன்படிக்கையைப் போல பிரமாணத்தை நிறைவேற்ற ஜீவனை அளிக்கும் ஒரு உடன்படிக்கையை ஆதாமோடு தேவன் பண்ணியிருக்கக்கூடாதா?

**பதில் :** ஆதாம் முழுமையான சோதனையை பெற்ற பிறகு, அவர் அந்த சோதனையில் தோற்ற பிறகு, அவர் மரண தண்டனை கொடுக்கப்பட்ட பிறகு, அவர் கிட்டத்தட்ட விழுந்து போன நிலைக்கு சென்ற பிறகு, இன்னொரு ஏற்பாட்டை தேவன் ஏற்படுத்துவது அவரது ராஜ்யத்தை சிறுமைப்படுத்துவதாக இருக்கும். இது தெய்வீக ஒழுங்குகளுக்கு இசைவாகவும் சரியானதாகவும் இருக்காது என்று நாங்கள் நினைக்கிறோம். இன்னொரு சோதனையை பரிந்துரைப்பது தெய்வீக ஒழுங்குகளுக்கு பொருத்தமற்றதாக இருக்கும். முன்னரே செய்யப்பட்ட மீறுதலுக்கு முதலாவது மீட்கும் பொருள் கொடுக்கப்பட வேண்டும். ஆதாமுக்கும், அபூரணத்தில் பிறந்து, விரும்பியோ, தெரிந்தோ, அறிவுடனோ தேவனுக்கு விரோதமாக பாவம் செய்யாத அவரது பிள்ளைகளுக்கும் மிகவும் வித்தியாசத்தை நாம் காண்கிறோம். அவர்களால் தெய்வீக பிரமாணத்தை கைக்கொள்ள முடியுமா அல்லது முடியாதா என்பதைக் காண்பதற்கான ஒரு சந்தர்ப்பம் அவர்களுக்கு கொடுக்கப்படவே இல்லை.

தேவன் இஸ்ரயேலருக்கு நிழலான பரிசுத்தம், நிழலான நீதிப்படுத்துதல் முதலான சூழ்நிலைகளை பொதுவான போதனைகளை கொடுப்பதற்காக கொடுத்தார். சகல மனுக்குலத்திற்கும் தெய்வீக கிருபைக்கும் நித்திய ஜீவனுக்கும் திரும்பி வரக்கூடிய சந்தர்ப்பத்தை கொடுத்து, அவர்களுக்கு கொடுக்கப்போகிற மகா ஆசீர்வாதங்களையும் முன்னறிவித்தார்.

**R4783**

## I AM MY BELOVED'S AND MY BELOVED IS MINE

## "நான் என் நேசருடையவள், என் நேசர் என்னுடையவர்"

உன்னதப்பாட்டு 6:3

சரியாக புரிந்துகொண்டால் வேதாகமத்தை ஒரு காதல் கதையாக நாம் ஆச்சரியத்துடன் காண்கிறோம். பூமிக்குரிய காதல் கதையுடன் இதை ஒப்பிட முடியாது. முதலாவதாக நமது இனத்திற்கான பிதாவானவரின் அன்பை நாம் பெற்றிருக்கிறோம். ஆரம்பத்தில் அவரது சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட அது கீழ்ப்படியாமையினால் விழுந்து நீதியான தண்டைக்குள்ளானது. நாம் இன்னும் பாவிகளாயிருந்த போது தேவன் எப்படி எவ்வளவாய் உலகின் மீது அன்பு கூர்ந்தார் என்றும் அவர் தமது ஒரே பேறான குமாரனை மீட்பராக கொடுத்தார் என்றும் அவரது அன்பான ஏற்பாட்டை அறிந்தபிறகு அவரிடம் திரும்பிவர விரும்புகிறவர்களுக்கு தெய்வீக தயவையும் ஆசீர்வாதங்களையும் திரும்ப அளிப்பார் என்றும் நமக்கு அறிவிக்கப்பட்ட கதையில் என்ன ஒரு ஆச்சரியமான தெய்வீக நீதியுடன் கலந்த பெற்றோருக்கான அன்பின் கதை சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரு காலத்தில் நம்மை பயமுறுத்திய கருத்துக்கு தெய்வீக குணலட்சணமும் திட்டமும் எவ்வளவு மாறுபட்டிருக்கிறது. வல்லமை மற்றும் அறிவில் சர்வ வல்லவராயிருக்கும் தேவன் அன்பிலும் தயவிலும் தரித்திரராக இருந்தார் என்று நினைத்திருந்தோம். அவரைப் பற்றி உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தப்பறையான போதனைகளின்படி, நம்மையோ அல்லது பூமியையோ சிருஷ்டிப்பதற்கு முன்பு நித்திய சபையில் அமர்ந்து, நமது சிருஷ்டிப்பைக் குறித்தும் நமது நித்தியமான விதியைக் குறித்தும் திட்டமிட்டார் என்றும் நினைத்தோம். (கேட்டிசம் .. வகுப்பில் போதிக்கப்படுவது போல) அவர் வேண்டுமென்றே தமது சுயசித்தத்தின்படி நமது இனத்தில் மிகவும் சொற்பமானவர்கள் மட்டுமே தற்கால உலகிலோ அல்லது வரக்கூடிய உலகிலோ பேரின்ப நிலைமை அடையும்படி சாதகமற்ற சூழ்நிலையில் நம்மை வைத்திருக்கிறார்; பெரும்பாலான அறியாமையுள்ள ஜனங்களை (இப்பிரபஞ்சத்தின் தேவனால் குருடாக்கப்பட்டிருக்கிறவர்கள்) பாவத்திலும் சீரழிவிலும் அழிந்திருக்கிற, பாவத்திலும் துர்குணத்திலும் உருவான ஜனங்களை அவர்களது பரிதாபகரமான நிலைமையிலிருந்து வரமுடியாமல் நித்திய ஆக்கினையுள்ள ஒரு பெரிய இடத்தில் போடப்படுவார்கள் என்று நமக்கு சொல்லப்பட்டது. அவர்களது பயனற்ற, கவனிக்கப்படாத ஜெபத்தைப்போல அவர்களது சாபத்திலிருந்தும், வேதனைக் குரல்களிலிருந்தும் வெளியே வரவே முடியாது.

### உண்மையிலேயே தேவன் அன்பாக இருக்கிறார் என்று அறிவது மன சமாதானம்

நாம் முடிவாக தேவனைப் பற்றியும் அவரது விலையேறப் பெற்ற வார்த்தையைப் பற்றியும் நல்ல ஒரு புரிந்து கொள்ளுதலுக்கும் நாம் வந்திருப்பதால் எப்படிப்பட்ட ஒரு மன அமைதியை நாம் அனுபவிக்கிறோம்! இருண்ட யுகங்களில் போதிக்கப்பட்ட இந்த போதனைகள் எல்லாம் உண்மையில்லாதது, கொடுமையானது, அநீதியானது, வேதவாக்கியங்களுக்கு மாறானது; தெய்வீக குணலட்சணங்களாகிய நீதி, ஞானம், அன்பு மற்றும் வல்லமை போன்றவைகளை சரியானபடி அப்பியாசப்படுத்துகிற ஒவ்வொருவருக்கும் இது தவறானதாக இருக்கிறது. குழந்தைகளாக இருந்தபோது பெற்றோர்களும் தாதிமார்களும் பயமுறுத்தி கீழ்ப்படியப் பண்ணுகிறதற்காக சொல்லப்பட்ட ஞானத்திற்கும் ஒழுங்குமுறைக்கும் மாறுபாடானவைகளை நமக்கு ஞாபகப்படுத்துகிறது.

குழந்தையாக இருந்த போது பூச்சாண்டி காண்பித்து பயமுறுத்தியது எல்லாம் மறந்து போயின. நாம் வளர வளர அவைகளெல்லாம் நாம் தவறு செய்யாமலிருக்க பயன்படுத்தப்பட்டவைகள் என்று உணர்ந்து கொண்டோம். அதே போல "தேவனைப்பற்றிய பயம்," அவைகள் தீவிரமாக இருந்தாலும் அவைகள் நீதியானதாகவும் நியாயமானதாகவும் இருக்கின்றன. ஆனால் இவைகளெல்லாம் இறையிலாளர்களால் திரிக்கப்பட்டு தீமை செய்யாதிருக்க உலகத்தின் மீது அப்பியாசப்படுத்தப்பட்டன. நாம் வேதவாக்கியங்களில் கற்றுக்கொண்டிருப்பதாவது: "அவர்கள் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது." (ஏசாயா 29:13)

தேவன் உண்மையிலேயே அன்பான தேவன் என்று அறியும் போது நமது உள்ளம் எவ்வளவு இலகுவாகிறது! அவர் நம்மை முற்றிலும் இரட்சிக்க விருப்பம் உள்ளவராக மாத்திரமல்ல, அவர் மேல் நம்பிக்கையுள்ளவர்களை, இரட்சிக்க வல்லவராகவும் இருக்கிறார். ஆதாமின் சந்ததியில் வந்த ஒவ்வொருவரும் அவருடைய கிருபையை பற்றிய தெளிவான அறிவுக்கும் முழு சந்தர்ப்பத்திற்கும் வந்து, அதனால் முடிந்த அளவுக்கு கீழ்ப்படிதலுக்கு வந்து கிறிஸ்து இயேசு மூலம் நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ள ஏராளமான ஏற்பாடுகளை செய்து இரட்சிக்க விருப்பம் உள்ளவராக இருக்கிறார்.

சில சமயங்களில் நாம் பின்னோக்கி பார்த்து பயங்கரமான குழியிலிருந்தும், பாவச்சேற்றிலிருந்தும் நம்மை யேகோவா தேவன் தூக்கி எடுத்து, கிறிஸ்து இயேசு என்றும் கற்பாறையின் மேல் வைத்ததை காண்கிறோம். மேலும் நம் கண்களை அவர் அபிஷேகம் செய்து இப்பொது இந்த யுகத்தின் கடைசியில் அவரது வார்த்தையில் அதிசயமானவைகளை காணும்படி செய்ததையும் நினைவுகூருகிறோம். மேலும் அவர் எப்படி நம்மை "அந்தகாரத்தினின்று ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தார்" என்பதையும் நாம் உணருகிறோம். நமது மூட நம்பிக்கை என்கிற முகத்திரையையும், தவறான புரிந்து கொள்ளுதலையும், அவரது வார்த்தையை மூடியிருந்த தவறான மொழி பெயர்ப்புகளையும் நமது புரிந்து கொள்ளுதலை மறைத்திருந்ததையும் ஜோதிகளின் பிதாவைப் பற்றிய நம்முடைய பாராட்டுதலையும் கருத்தையும் மங்கச் செய்திருந்ததையும் நீக்கும்படி செய்ததையும் நாம் காண்கிறோம். இவரிடமிருந்தே சகல நன்மைகளும் ஈவுகளும் வருகின்றன. (யாக்கோபு 1:17)

## ஒருவர் அல்ல, அநேகர் கிறிஸ்துவின் மணவாட்டியாகும்படி தெரிந்து கொள்ளப்படுகின்றனர்

ஆனால் நமது வசனம், வேத வாக்கியங்கள் மகா காதல் கதையின் இன்னொரு பகுதியைப் பற்றி விசேஷமாக கூறுகிறது. நமது அன்பான பிதா, நமது இனத்தார் அனைவருக்கும் கிறிஸ்து இயேசு மூலமாக இரட்சிப்பை கொடுத்ததோடு கூட இன்னும் மேலாக செய்தார். பிதாவானவரிடம் கீழ்ப்படிதலின் மூலம் இவைகளை பொறுமையுடன் சகித்ததற்காக (பிலிப்பியர் 2:8-11) அவர் நமது இரட்சகரை கனப்படுத்தி மகிமைப்படுத்தினார். அதோடு கூட அவரது குமாரனும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு மணவாட்டியையும் உடன்சுதந்தரரையும் தெரிந்தெடுத்தார். மணவாட்டியாக இருக்கும்படி அவர் ஒருவரை தேர்ந்தெடுக்காமல் அநேகரை தேர்ந்தெடுத்தார். எனினும் அவர்கள் உலகத்தை ஒப்பிடும் போது "சிறுமந்தையாக" "தெரிந்துக் கொள்ளப்பட்ட சபையாக," "மணவாட்டியாக" ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாக அழைக்கப்பட்டு, தெரிந்துக்கொள்ளப்பட்டு பூரணப்படுத்தக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

மனித மூளைகளால் கற்பனை செய்து உருவேற்படுத்திய காதல் கதைகள் எதுவும் நமது சொந்த ஜீவனைக் கொடுத்து மீட்டுக்கொண்ட சபையை அவர் நேசித்த கதையுடன் ஒப்பிடவே முடியாது. பிதாவினால் மகிமையினால் பரிசளிக்கப்பட்டார். அவரோடு இணைகிற அனைவரும் அவரது சிலுவையிலும், அவரது பாடுகளிலும், அவரது மரணத்திலும் பங்கு பெறவும் அதன்மூலம் அவரது மகிமையிலும், அவரது அன்பிலும், அவரது சிங்காசனத்திலும் பிதாவானவரின் சலுகையிலும் பங்கு பெறவும் அழைக்கப்படுகிறார்கள். இங்கே நாம் அதிக விரிவாக சொல்ல போவதில்லை. இதை முன்னரே பார்த்திருக்கிறோம். நமது வாசகர்களும் அதன் ஒவ்வொரு அம்சத்தையும் அறிந்திருக்கிறார்கள். ஆகையால் நாம் மணவாட்டியாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான சில நிபந்தனைகளை கவனிக்க நாம் கடந்து போவோமாக. எப்படி நாம் அழைக்கப்பட்ட நமது அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்துவோம் என்பதை கவனிப்போம்.

## "நான் என் நேசருடையவள்" என்று சிலர் மட்டுமே உள்ளத்திலிருந்து கூற முடியும்

நமது வசனம் அனைத்து காரியத்தையும் சுருக்கமாக குறிப்பிடுகிறது. (1) "நான் என் நேசருடையவள்." இதை அறியாமல், யாரும் "மணவாட்டியாகவும், ஆட்டுக் குட்டியானவரின் மனைவியுமாகிய" இந்த விசேஷித்த தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பிற்குள் செல்ல முடியாது. புறஜாதி தத்துவ சாஸ்திரிகள் அல்லது மற்றவர்கள், கிறிஸ்துவைப் பற்றி அறியாமலும் அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்ளாமலும் வாழ்ந்து மரித்து போனதால் இந்த தெரிந்துகொள்ளப்பட்ட சபையில் அங்கமாகவோ, மணவாட்டியாகவோ ஆகமுடியாது. அதில் அங்கமாக இருக்கிறவர்கள் மட்டுமே "நான் என் நேசருடையவள்" என்று கூற முடியும். இதே காரணத்ததால் நல்ல நிலைமையில் நிற்கக்கூடிய அநேக சபை அங்கங்கள் இந்த காரியத்தில் பங்கு இல்லாதவர்களாக இருக்கிறார்கள். ஏனெனில் சிலர் மட்டுமே இருதயத்திலிருந்து, "நான் என் நேசருடையவர்கள்" என்று கூற முடியும். இந்த இணைப்பு விலையேறப்பெற்ற இரத்தத்தில் விசுவாசம் மற்றும் மனந்திரும்புதல் மூலம் நீதிமானாக்கப்பட்டதை உணர்த்துகிறது. ஏனெனில் நீதிமானாக்கப்பட்டவர்கள் மட்டுமே "அழைக்கப்படுகிறார்கள்." (2) "நான் என் நேசருடையவள் என்று கூறக்கூடியவர்கள், இயேசுவை அறிந்தவர்கள் மாத்திரமல்ல, அவரோடு உறுதியான உடன்படிக்கை பண்ணினவர்கள். மேலும் இந்த உடன்படிக்கையானது நம்மால் முடிந்தவரை நமது சிந்தனை, செயல், வார்த்தை அனைத்திலும் அவரைப்பற்றியே இருக்கும். அவர் நம்மை ஏற்றுக்கொண்டு அவருடைய மணவாட்டியாக இருப்போமானால் அதுவே நமது திருமண உறுதிமொழி அல்லது உடன்படிக்கை.

தீமை பரவியிருந்து, இந்த உலகத்தின் அதிபதி அநேகருடைய கண்களை குருடாக்கி வைத்திருக்கும் இந்த காலத்தில் தேவன் ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால், ஒருவனும் கர்த்தராகிய இயேசுவிடம் வரமாட்டான் என்ற வேதவாக்கியங்கள் நமக்கு உறுதியாக கூறுகின்றன. (யோவான் 6:44) பிதாவனாவர் இப்போது அனைத்து மனுக்குலத்தையும் இழுத்துக்கொள்ளவில்லை. விசுவாசிகளை மட்டுமே இழுத்துக்கொள்ளுகிறார். உலக ஜனங்களை இழுக்கும் வேலையை மேசியாவின் யுகமாகிய அடுத்த யுகத்திற்கு விட்டு விடுகிறார். அப்பொழுது கிறிஸ்துவும் அவரது மகிமையடைந்த சபையும் தேவனுடைய ஏஜெண்டுகளாக இருந்து உலக முழுவதும் சத்தியத்தை அறிகிற அறிவிலே நிறைந்திருக்கும்படி செய்வார்கள்.

சத்தியமும் அதன் புரிந்து கொள்ளுதலும் இருதயத்தை அடையும் போது தற்காலத்தில் மாத்திரமல்ல, வரப்போகிற யுகத்திலும் எதிர்ப்பு இருக்கவே செய்யும். (அப்போஸ்தலர் 3:23) கொஞ்சம் பேர் மட்டுமே சத்தியத்தை அறிந்திருக்கிறபடியால் கொஞ்சம் பேர் மட்டுமே சத்திய அறிவினால் இப்போது இழுத்துக் கொள்ளப்படுகிறார்கள். அநேகர் சத்தியத்தை மறுத்து பெரிய மணவாளனுடன் இணையும் சந்தர்ப்பத்தை மறுக்கும் போது, சிலர் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு கர்த்தரிடம் தங்களை முற்றிலுமாக ஒப்புக்கொடுக்கிறார்கள். இப்படியாக தங்களை உடன்படிக்கையின் மூலம் அவரிடம் இணைத்துக்கொண்டு, அவரையும் தங்களுடன் இணைத்துக்கொள்ளுகிறார்கள்.

### உண்மையுள்ளவர்களாக இருந்தால், "என் நேசர் என்னுடையவர்" என்று ஒவ்வொருவரும் கூற சலுகையாக இருக்கிறது

தெய்வீக அழைப்பை எப்போதாவது ஏற்றுக்கொண்டிருக்கிறோமா என்று ஒவ்வொருவரும் நிச்சயமாக தீர்மானிக்க வேண்டும். (நீதிமொழிகள் 23:26; ரோமர் 12:1) அவருடைய மணவாட்டியின் அங்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால், விசுவாசத்தில் தொடர்ந்து இறுதிவரை இருக்க வேண்டும், நாம் உண்மையுள்ளவர்களாக இருந்து, இதுவரை விசுவாசத்தில் தொடர்ந்து இருந்தால், நாம் உறுதியுடன் பார்க்கக்கூடியவர்களாகவும் "நேசர் என்னுடையவர்" என்கிற இரண்டாம் பகுதிக்கு நிச்சயம் உள்ளவர்களாகவும் இருப்போம். இதே மனோபாவத்தில் இருப்போமானால், இதில் நிலைத்திருக்கக் கூடுமானால், "மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாக இருந்தால்," இப்படி செய்வதால், நாம் உயிர்த்தெழுதலில் கர்த்தருடன் இருப்போம் என்பதையும், அவரைப் போல இருந்து, அவருடைய மகிமையிலும், அவரது சிங்காசனத்திலும் பங்குபெறுவோம் என்பதையும் அறிவோம். (வெளிப்படுத்துதல் 3:21)

"என் நேசர் என்னுடையவர்" என்ற இந்த கூற்றில் எவ்வளவு அர்த்தம் உள்ளது! "குமாரனை உடையவன் ஜீவனை (நித்திய ஜீவனை) உடையவன்" என்று அறிவிக்கிற வேத வாக்கியத்தை நாம் ஞாபகப்படுத்தப்படுகிறோம். இதை விட இன்னும் அப்போஸ்தலர் உறுதியுடன் கூறுவதாவது: கிறிஸ்துவை உடையவர்கள், உண்மையாக, வேதவாக்கியத்தின்படி "என் நேசர் என்னுடைய" என்று சொல்லக்கூடியவர்கள் "சகலத்தையும் பெற்றிருக்கிறார்கள்." ஏனெனில் சகலத்துக்கும் கிறிஸ்துவே உரிமையானவர். நாம் அவரோடு இணைந்தோமானால், உண்மையிலேயே, "எல்லாம் உங்களுடையது; நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்." (1 கொரிந்தியர் 3:22,23) விலையேறப்பெற்ற இரத்தத்தின் புண்ணியத்தினால் நமது பாவங்கள் கருணையுடன் மன்னிக்கப்பட்டதை அறியும் நம்மிடமிருந்து பெரிய சுமை நீக்கப்படுகிறது. பிரபஞ்சத்தின் மகா ராஜாவின் குமாரனுடன் இணைந்திருக்கிறோம் என்பதை அறிகிறோம். இந்த குமாரனுடன் பிதாவானவர் மிகவும் பிரியமுள்ளவராக இருக்கிறார். அவரிடம் மட்டுமே மகிமையிலும் பிரபஞ்சத்தின் அரசாட்சியிலும் இணைந்திருக்கிறார்.

கிறிஸ்துவுக்குள்ளான ஆசீர்வாதத்துக்கான இந்த வாக்குத்தத்தம் எதிர்காலத்திற்கே பொருந்தும். கனமும் மகிமையும் தற்காலத்துக்குரியதல்ல. ஆனால் சீக்கிரத்தில் வெளிப்படுத்தப்படும். ஆனால் மணவாளனின் கவனிப்பு, பாதுகாப்பு மற்றும் ஆறுதலும் அவருடன் ஒப்பந்தம் செய்யப்பட்டவர்களுக்கு இப்பொழுதே இந்த கூடாரத்தில் இருக்கும் போது கிடைக்கிறது. "நாம் மரண இருளின் பள்ளத்தாக்கில்" நடந்தாலும் நாம் பயப்படமாட்டோம். ஏனெனில் அவர் நம்முடன் இருக்கிறார். அவரது தடியும் கோலும் நம்மைத் தேற்றும்.

அவருடைய விசுவாசத்துடன் தரித்திருக்கிற அனைவரும் "நான் என் நேசருடையவள், என் நேசர் என்னுடையவர்" என்று சொல்லக்கூடிய அனைவரும் வருங்கால ஜீவனுக்கான வாக்குத்தத்தைத்தை மட்டும் பெறாமல், தற்கால ஜீவியத்திற்கான வாக்குத்தத்தத்தையும் பெற்றிருக்கிறார்கள். "இதோ உலகத்தின் முடிவு பரியந்தமும் சகல நாட்களிலும் நான் உங்களுடனே இருக்கிறேன்" என்கிற ஆண்டவருடைய குரலை அவர்கள் கேட்கிறார்கள். இந்த யுகத்தின் முடிவில் விசேஷமாக அருகாமையிலும், விசேஷமாக விலையேறப் பெற்றவராகவும் இருந்து தம்முடைய விசுவாசிகளுக்கு, அவர்கள் அவரது மகிமையில் மறுரூபமடைவதற்கு முன்னரே விசேஷித்த விதமாக வெளிப்படுத்துவார்.

### "மகாமேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்" அனைத்தும் இந்த வகுப்பாருக்குரியது

தெய்வீக வார்த்தையாகிய "மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்" அனைத்தையும் தங்களுக்குரியதாக்கிக்கொள்ளுவதும் தங்களுக்குரியது என்று உணருவதும் அவர்களுக்கான சலுகை. ஆறு துன்பங்களிலும் உன்னுடனே இருப்பேன், ஏழாவதிலும் உன்னை கைவிடுதில்லை என்கிற கர்த்தரின் குரலை இவர்கள் கேட்பார்கள். "என்னுடைய கிருபை உனக்கு போதும்." "ஆபத்து காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன்." அன்றியும், "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாக தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு (மணவாட்டிக்கு, ஆட்டுக்குட்டியானவரின் மனைவிக்கு) சகலமும், நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது) என்று உறுதிக் கூறப்படுகிறோம்." (யோபு 5:19; 2 கொரி.12:9; சங்கீதம் 50:15; ரோமர் 8:28)

கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிஞரின் வார்த்தைகளில் நன்றாக சொல்லப்பட்டிருக்கிறது:-

"ஒவ்வொருநிலைமையிலும், வியாதியிலும், ஆரோக்கியத்திலும்,
வறுமையின் பாதாளத்திலும், செல்வ செழிப்பிலும்
வீட்டிலும் வெளி நாட்டிலும் நிலத்திலும் கடலிலும்
தேவைப்படும் போது, உமது வலிமை எப்பொழுதும் இருக்கும்.

"நீரின் ஆழங்களிலிருந்து உம்மைக் கூப்பிட்டாலும்,
ஆறுகளின் நிழல்கள் உன்மேல் புரண்டு வராது;"
நான் உன்னோடு கூட இருந்து உன் துன்பங்களில் ஆசீர்வதிப்பேன்.
உன் ஆழ்ந்த துன்பங்களில் உன்னை பரிசுத்தப்படுத்துவேன்.

"கொடிய சோதனைகள் உன் வழியிலே வரும் போது
என்னுடைய கிருபை உனக்கு போதுமானதாக இருக்கும்.
அக்கினி உன்னை சேதப்படுத்ததாது, நானே வடிவமைத்தேன்,
உன் அழுக்கை நீக்க, உன் பொன் உன்னை புடமிடும்."

எந்த நாவும் கூறமுமுடியாத "நான் என் நேசருடையவள், என் நேசர் என்னுடையவர்" என்பதை பார்த்து உணரக்கூடியவர்களுக்கு எப்படிப்பட்ட ஒரு சமாதானத்தின ஆசீர்வாதம், ஆவியின் அமைதி, நல்ல ஒரு கிறிஸ்துவின் வீரனாக கஷ்டத்தை சகிக்கிற திறமை, சோதனை சமயத்தில் பலமும் நிலைத்திருத்தலும் மணவாளனின் அருமையான உறுதிக்குப்பின் இருக்கிறது! உலகத்தை ஆச்சரியத்தில் மூழ்கச் செய்த அநேக இருளான மற்றும் சோதனையான அனுபவங்களை கடந்து செல்லும்படி கடந்த காலத்தில் விசுவாசிகளை தேவன் அனுமதிக்கிறார். அந்த சோதனையின் சூளையில் அக்கினியைக் கண்டார்கள். ஆனால் அங்கே அவர்களுடன் தேவ புத்திரரைக் காணவில்லை. (தானியேல்

3:25) காணக்கூடாதிருந்த அவரைக் கண்டு சகித்தார்கள். (எபிரேயர் 11:27) இந்த அதரிசனமான நண்பரை அறியாத பரிதாபமான உலகமானது, மற்ற எல்லாரைக் காட்டிலும், இந்த பரலோக மணவாளனை அறிந்தவர்களுக்கு ஒவ்வொரு சோதனை நேரத்திலும் அவரது கிருபையை தொடர்ந்த இருக்கச் செய்வதை அறியாதிருப்பது மிகவும் பரிதாபத்திற்குரியது. உலகமானது அதன் சுமைகளை அதுவே சுமக்க வேண்டியிருக்கிறது. ஆனால் கர்த்தருடைய ஜனங்கள் அந்த சுமைகளை, பெரிய சுமைகளை தாங்குகிறவரின் பாதத்தில் வைக்கக்கூடிய சலுகையை பெற்றிருக்கிறார்கள். "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்பதே அவரது அழைப்பாக இருக்கிறது.

ஆனால் உலகத்தின் நிலைமை வருத்தத்திற்குரியதாக இருக்கிறது. ஏனெனில் நமது மணவாளனை அது அறியவில்லை. ஒரு காலத்தில் அவரை அறிந்திருந்து அவரை ஒரு ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும் பெற்றிருந்து, வாழ்க்கையின் அனைத்து காரியங்களிலும் அவரது உதவியையும் அவரது அன்பான கவனிப்பையும் ஒரு காலத்தில் அனுபவித்தவர்கள் அவரை விட்டு விலகி அவர்களது ஆதிகால அன்பை இழந்தவர்களின் நிலைமை எவ்வளவு மோசமாக இருக்கிறது. அவர்கள் தங்களது பழைய பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை மறந்திருக்கிறார்கள். தற்காலத்தைக் குறித்தும் வருங்காலத்தைக் குறித்தும் கொடுக்கப்பட்டுள்ள "மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களுக்கு" செவிடராயிருக்கிறார்கள்; அவர்கள் தற்போது அழிந்து போகிற காரியங்களுக்காக கஷ்டத்துடன் முயற்சிக்கிறார்கள். அவைகள் பெரும்பாலும் கொஞ்ச காலத்துக்குமட்டுமே. (2 கொரிந்தியர் 4:17,18) இவர்கள் உலகத்தைக் காட்டிலும் மிக மோசமான நிலைமையிலிருக்கிறார்கள்.

அப்போஸ்தலர் அறிவிக்கிறதாவது: "அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும்." (2 பேதுரு 2:21)

கிறிஸ்துவின் நாமத்தை பெற்றிருக்கிற நாம், அவரது நாமத்தை ஏற்றுக்கொண்டவர்களாகிய நாம் அவரில் நிலைத்திருந்து, விசுவாசத்திலும் அன்பிலும் வைராக்கியத்திலும் தொடர்ந்து அவரது அடிச்சுவட்டில் நடந்து இப்படியாக நமது அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்துவோமாக.

**R4784**

## OTHER SHEEP NOT OF THIS FOLD
## இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகள்

"இந்த தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகள் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டு வர வேண்டும்; அவைகள் என் சத்தத்துக்கு செவி கொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும், ஒரே மேய்ப்பனுமாகும்."-யோவான் 10:16

சுவிசேஷ யுகத்தில் கர்த்தர் தம்மை பின்பற்றுகிற ஒரே சபையை, ஒரே மந்தையை பெற்றிருக்கிறார். "என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவி கொடுக்கிறது, நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்கு பின் செல்லுகிறது." (யோவான் 10:27) ஆரம்பத்திலிருந்தே சீஷத்துவத்தின் நிபந்தனைகளிலோ அல்லது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வெகுமதியிலோ எந்தவித மாற்றமுமில்லை. "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்." (எபேசியர் 4:4)

"வேற ஆடுகள்" என்பது மற்ற ஆடுகளை குறிக்கின்றது. சுவிசேஷ யுகத்திற்கு பிறகு வேறு அழைப்பின் கீழ் வேறு நிபந்தனைகளின் கீழாக அழைக்கப்பட்டு கர்த்தரின் சீஷர்களாகிறவர்கள். தற்கால மந்தை பூமிக்குரிய சுபாவத்தை பலியிட்டு, நமது ஆண்டவர் மற்றும் மேய்ப்பரின் தெய்வீக சுபாவத்திற்கு பங்கு பெறுகிறவர்கள். (ரோமர் 12:1,2; 2தீமோ. 2:11,12; 2பேது. 1:3,4) எதிர்கால கர்த்தரின் மந்தை, பலி மற்றும் சுபாவ மாறுதலுக்கு அழைக்கப்படவில்லை. மாறாக, ஏதேனில் பாவத்தின் மூலம் இழந்ததும் கல்வாரியில் மீட்கப்பட்டதுமான சிந்தை, சரீரம் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றின் பூரணத்தை, மானிட சுபாவத்தை படிப்படியாக கீழ்ப்படிதலின் மூலம் அடையும் சலுகையை பெறுவார்கள். இவைகள் தற்கால மந்தையல்ல. ஏனெனில் அவர்கள் தெய்வீக சுபாவத்திற்கோ ஒரு பரலோக வாசஸ்தலத்திற்கோ அழைக்கப்படவில்லை. மாறாக, மேசியாவின் ஆளுகையில் திரும்பப்பெறப்போகிற பரதீசுக்கும் பூமிக்குரிய சுபாவத்திற்கும் அழைக்கப்படுவார்கள்.

### "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும் போது, நீங்களும் அவரோடுகூட மகிமையில் வெளிப்படுவீர்கள்"

இந்த வேறே ஆடுகளைப் பற்றி நமது ஆண்டவர் மத்தேயு 25: 31-46இல் குறிப்பிடுகிறார். இந்த "செம்மறி ஆடு, வெள்ளாடு" உவமை சுவிசேஷ யூகமாகிய இந்த யுகத்திற்கு உரியது அல்ல, வரவிருக்க யுகமாகிய மேசியாவின் ஆளுகையின் யுகத்திற்குரியது. இந்த உவமையின் முன்னுரையில் (வசனம் 31,32) "மனுஷ குமாரன் தமது மகிமை பொருந்தினவராய் சகல பரிசுத்த தூதரோடும் கூட வரும் போது தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாக சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல அவர்களைப் பிரிப்பார்."

இரட்சகர் இன்னும் மகிமையில் பிரவேசிக்கவில்லை. வாக்குத்தத்தமாவது: "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும் போது நீங்களும் (இந்த யுகத்தின் ஆடுகள், சபை) அவரோடு கூட மகிமையில் வெளிப்படுவீர்கள்." (கொலோசெயர் 3:4) சுவிசேஷ யுகத்தின் ஜெயங்கொண்ட ஆடுகள், மாபெரும் மேய்ப்பரின் ஆளுகையில் உலகின் மனுக்குலத்தோடு தொடர்பு கொள்ளும் வேலையில் இணைந்திருப்பார்கள். பிறகு மனுக்குலம் அனைத்திற்கும் ஒரு சோதனை அல்லது தீர்ப்பு வரும். அது யார் செம்மறியாட்டைப் போன்ற குணலட்சணத்தையும் யார் வெள்ளாட்டைப் போன்ற குணலட்சணத்தையும் அபிவிருத்தி செய்வார்கள் என்பதைப் பற்றியதாகும்.

### மேசியாவின் ஆளுகையில் ஆடுகளை பிரிக்கும் வேலை நடைபெறும்

ஆயிரம் வருட யுகத்தில் கீழ்ப்படிதலின் ஆவியை அபிவிருத்தி செய்கிறவர்கள் செம்மறியாட்டு மந்தையில் சேர்க்கப்பட்டு சரியான கிருபைக்கும் நித்திய ஜீவனுக்கும் பாத்திரராக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். அந்த யுக முடிவில், "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்

பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்" என்ற அவரது வார்த்தைகளைக் கேட்பார்கள். (வசனம் 34)

அந்த மகிமையான காலத்தின் சாதகமான நிலைமைகளின் கீழும் மாறான ஆவியை உடையவர்கள், சாந்தம், நற்குணம், அன்பு போன்ற கர்த்தரின் ஆட்டின் குணலட்சணங்களை அபிவிருத்தி செய்ய தவறியவர்கள் நித்திய ஜீவனுக்கு அபாத்திரர் என்றும் கர்த்தரின் ஆடாக கருதப்பட தகுதியற்றவர்கள் என்றும் கருதப்படுவார்கள். அந்த சமயத்தில் அவரது இடது பக்கத்தில் உள்ள அவரது வெறுப்பின் இடத்தை எடுத்துக்கொள்ளுவார்கள். பிறகு அவர்கள் நீக்கப்படுவார்கள். செம்மறியாட்டு வகுப்பார் கர்த்தரின் கிருபையில் நிலைத்திருந்து நித்திய ஜீவன் பரிபூரணமாக அளிக்கப்படும். வெள்ளாட்டு வகுப்பார் நித்திய ஜீவனுக்கு தகுதியற்றவர்களாக கருதப்பட்டு அவரது வெறுப்புக்கு பாத்திரராக நித்திய தண்டனைக்கு அனுப்பப்படுவார்கள்.

எனினும் தண்டனையானது நித்திய ஆக்கினையாக இல்லாமல் நித்திய மரணமாக இருக்கும். ஏனெனில் கர்த்தர் மறுபடியும் தன்னை பலி கொடுக்கமாட்டார். அந்த மகிமையான ஆளுகையில் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளாதவர்களுக்கு மேலும் சந்தர்ப்பம் கொடுக்கப்படமாட்டாது. உவமையில் சொல்லப்பட்டது போல, கர்த்தருக்கு எதிரானவர்கள் வெள்ளாடாக குறிப்பிடப்பட்டது போல, அழிவுக்கு அடையாளமாக அக்கினி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது அந்த வெள்ளாட்டு வகுப்பார் மேல் வரும். அக்கினியானது அழிக்கக்கூடிய ஒன்றாக அறியப்பட்டிருப்பதால் அழிவுக்கு அது சரியானபடி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த உவமையில் வசனம் 46 இவ்விதமாக சரியானபடி வாசிக்கப்பட வேண்டும். "இவர்கள் நித்தியமாக ஜீவனிலிருந்து நீக்கப்படுவார்கள். நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையும்படி போவார்கள்."

**R4785**

## GOD'S PITY FOR THE HEATHEN
## புறஜாதியினருக்கு தேவனுடைய இரக்கம்

இந்த கட்டுரை **R5797**இல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. தயவு செய்து அதைப் பார்க்கவும்

**R4786**

## PRIDE GOETH BEFORE DESTRUCTION"
## "அழிவுக்கு முன்னானது அகந்தை"

இந்த கட்டுரை **R5804**இல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. தயவு செய்து அதைப் பார்க்கவும்

**R4787**

## THE CALL TO DIVINE SERVICE
## தெய்வீக ஊழியத்திற்கு அழைப்பு

"அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன்." ஏசாயா 6:8

இன்றைக்கு நாம் ஏசாயாவின் காட்சியை தியானிப்போம். எருசலேமில் உள்ள ஆலயம் அல்லது யேகோவாவின் வீடு என்று அழைக்கப்படுகிறதே காட்சியின் தோற்றமாக இருக்கிறது. ஆனால் பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம், கிருபாசனம், தூபபீடம், சமூகத்து அப்பத்துடனான மேஜை மற்றும் பொன் குத்துவிளக்கு எல்லாம் மாற்றப்பட்டு, ஒரு மகிமையான சிங்காசனம் அங்கே இருந்தது. அதில் கர்த்தர் வீற்றிருந்தார். அவருக்கு எல்லா பக்கங்களிலும் அவரது குணலட்சணங்களை குறிப்பிடுகிற நான்கு சேராபீன்கள் நின்றார்கள். ஆலயம் தேவனைப் பின்பற்றுகிறவர்களால் நிறைந்திருந்தது. ஆலயமானது மகிமையின் வெளிச்சத்தினால் நிறைந்திருந்து. இரண்டு சேராபீன்கள், "சேனைகளின் யேகோவா பரிசுத்தர், பரிசுத்தர்" என்று கூறினார்கள். மற்ற இரண்டு சேராபீன்களும் மற்ற பக்கத்திலிருந்து, "பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது" என்று கூறினார்கள். இதைத் தொடர்ந்து வாசல்களின் நிலைகள் அசைந்து, மகிமையை மங்கலாக்கி ஆலயம் புகையினால் நிறைந்தது.

### முழு பூமியும் கர்த்தின் மகிமையால் நிறைந்திருப்பதாக

இந்த காட்சியின் கருத்தை நாம் இயேசுவின் வார்த்தைகளிலிருந்து பெறுகிறோம். அவர் இந்த காட்சியை நேரடியாக நமக்கு குறிப்பிடுகிறார். (யோவான் 12:41) தெய்வீக வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலாக இயேசு தமது முதலாம் வருகையில், யோகோவா தேவனின் வாக்குத்தத்தத்தின்படி (எரேமியா 31:31) தம்மை இஸ்ரயேலரிடம் புதிய உடன்படிக்கையின் மாபெரும் மத்தியஸ்தராக மாபெரும் மகிமையின் இராஜாவாக காண்பித்தார். இயேசு ஏற்றுக்கொள்ளப்படமாட்டார் என்பதை தேவன் அறிந்திருந்தார். எனினும் பலி ஏற்பாடு செய்யப்பட்டது. மேசியா ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் அவர் தமது மகிமையையும் அதிகாரத்தையும் எடுத்துக் கொண்டிருந்தால், ஆவிக்குரிய ராஜ்யத்தில் அவரோடு இணைந்திருக்கக்கூடிய மணவாட்டி வகுப்பாரின் எண்ணிக்கை நிறைவடையும்படி யூத இனத்திலிருந்து போதுமான எண்ணிக்கையில் அவரை முழு மனதுடன் ஏற்றுக் கொண்டிருப்பார்கள் என்று பொருள் படும். அப்படியென்றால் மேசியாவின் மகியைமான ராஜ்யத்தில் அவருக்கு உடன் சுதந்தராக இருக்கும்படி புற ஜாதியாருக்கு அழைப்பு கொடுத்திருக்க முடியாது. இஸ்ரயேலர்கள் முழு ஆசீர்வாதத்தையும் எடுத்துக்கொண்டிருப்பார்கள். உடனே ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும். இஸ்ரயேலர் தேசம் மேசியாவை ஏற்றுக்கொண்டு உடனே சகல ஜாதிகளுக்கும் தெய்வீக ஆசீர்வாதத்திற்கு வழியாக ஆகியிருக்கும்.

பூமியனைத்தும் கர்த்தருடைய மகிமையால் நிறைந்திருக்கும் என்று அந்த குரல் அறிவித்த போது, இந்த செய்தியைப் பெற்றுக்கொள்ள இந்த உலமானது தயாராக இல்லை என்பதை வாசல்களின் நிலைகளை அசைத்ததும், மகிமையின் காட்சியை மங்கச் செய்ததும் குறிப்பிடுகிறது. இதன் நிறைவேறுதலை, இந்த மகிமைக்கு வாசலாக இருக்கும் யூத தேசம் சரியான நிலைமையில் இல்லை என்ற உண்மையில நாம் காண்கிறோம். உலகிற்கு இராஜாதி

இராஜாவின் மகிமையை அறிவிப்பதற்கு உடனே இன்னொரு வாசல் ஏற்படுத்தப்பட வேண்டும். ஏதாவது ஒன்று அசைக்கப்படுகிறது என்றால், நிழலாக அது நிலையற்ற தன்மையை குறிப்பிடுகிறது என்றும் அதை நீக்கிவிட்டு இந்த இடத்தில் இதைவிட மேலானது நிலைநிறுத்தப்பட வேண்டும் என்றும் பரிசுத்த பவுல் அறிவிக்கிறார். யூத தேசமானது அதன் சாதகமான நிலைமையிலிருந்து நீக்கப்பட்டது. ஒரு புதிய வாசல், தேவனுக்கும் மனிதர்களுக்கும் இடையேயான ஒரு புதிய வழியானது ஸ்தாபிக்கப்படுவது நடைமுறைப் படுத்தப்படுகிறது.

**“நீங்கள் ஒரு பரிசுத்த ஜாதி”**

கனத்துக்குரிய நிலைக்கு இஸ்ரயேலைத் தவிர வேறு எந்த தேசமும் உலகில் தகுதியானதாக காணப்படவில்லை. அதைத் தொடர்ந்து தேவன், பரிசுத்தவான்கள் அடங்கிய ஒரு புது ஜாதியை ஏற்படுத்த தொடர்ந்து செயல்பட்டார். பரிசுத்த பேதுரு விளக்குகிறதாவது: “நீங்கள் ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும் பரிசுத்த ஜாதியாயும் இருக்கிறீர்கள்.” (1பேதுரு 2:9) முதலாவது பரத்துக்குரிய, ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட புதிய ஜாதியின் உட்கருவாக பரிசுத்தமான யூதர்கள் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். அதைத் தொடர்ந்து இந்த சுவிசேஷ யுகம் முழுவதும் தெரிந்துகொள்ளும் செயல்முறைகள் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதன் முடிவில் முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையினால் பரிசுத்த ஜாதி நிறைவடையும். பிறகு எல்லாம் தயார் நிலையில் இருந்து, பூமி அனைத்தும் யேகோவா தேவனின் மகிமையினால் நிறைந்திருப்பதாக என்ற கட்டளை சென்று உலகம் ஆசீர்வதிக்கப்படும். இந்த மாபெரும் வேலையில் மாம்சீக இஸ்ரயேலரும் ஒரு பங்கை பெறுவார்கள்.

காட்சியின் சத்தத்தால் வாசலின் நிலைகள் அசைந்து புகையினால் நிறைந்தது, கர்த்தருடைய மகிமைக்கு தானும் தேவன் தொடர்பு கொண்டிருக்கும் மற்றவர்களும் தயார் நிலையில் இல்லை என்பதை உணர்ந்து ஏசாயா தீர்க்கதரிசி கத்துகிறார். கர்த்தரின் கண நேர மகிமை அவரது சொந்த அபூரணத்தையும் அயலகத்தாரின் அபூரணத்தையும் காண்பித்தது.

இயேசுவின் போதனையை ஏற்றுக்கொண்டவர்களின் நிலைமையும் இதே போல இருந்தது. பிரமாணமானது மிகவும் அதிகமாக பிரகாசித்து ஜொலித்தது. தங்களது செயல்கள், வார்த்தைகள் மற்றும் சிந்தையிலும் தாங்கள் நினைத்திருந்ததைக் காட்டிலும் அதிகமாக மீறியிருக்கிறதை கண்டார்கள். ஏசாயா குறிப்பிட்டது போல, பரிசுத்தமானவர்கள் காரியங்களை இருதயத்துக்கு எடுத்துச் சென்று கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தினார்கள். தாங்கள் மனிதருக்கு போதிப்பதற்கு தகுதியற்றவர்கள் என்று உணர்ந்து கொண்டார்கள். ஆனால் முழு யூத ஜாதியும் மற்றவர்களும் அபூரணர்கள் என்பதையும் எந்த செய்தியையும் எடுத்துச் செல்ல அவர்களது உதடுகள் தகுதியற்றவை என்பதையும் உணர்ந்தார்கள்.

பலிபீடத்திலிருந்து கொண்டு வரப்பட்ட நெருப்பு தழலால் ஏசாயாவின் உதடுகள் தொடப்பட்டது. இஸ்ரயேலில் பரிசுத்தவான்களும் இந்த சுவிசேஷ யுகத்தில் மற்ற பரிசுத்தவான்களும் அவர்களது உதடுகளில் பரிசுத்தத்தை அடைந்து தெய்வீக அழைப்பை அறிவித்தார்கள். “நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும்.” (ரோமர் 12:1) தேவனுடைய பலிபீடத்திலிருந்து வந்த நெருப்புத் தழல் என்ற இந்த செய்தி கடந்த பதினெட்டு நூற்றாண்டுகளாக இங்கேயும் அங்கேயும் போயிருக்கிறது. இது நம்மை பாவத்திலிருந்து பரிசுத்தம் பண்ணுவதை மாத்திரமல்ல தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டியதையும் போதிக்கிறது.

**“இதோ அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்பும்”**

ஏசாயா பரிசுத்த ஜனங்களுக்கு தொடர்ந்து ஒரு நிழலாக இருந்தார். தேவன் இந்த கிருபையில் செய்தியையும் பலி கொடுப்பதற்கான அழைப்பையும் கேட்க காதுள்ளவர்கள் அனைவருக்கும் கொடுக்க தீர்மானித்தார். ஏசாயாவினால் நிழலாக காண்பிக்கப்பட்ட, இந்த யுக முழுவதும் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் கூறுகிறதாவது: “கர்த்தாவே, இதோ அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும்.”

மேலும் இந்த ஏசாயா வகுப்பாரின் செய்தி பிரபலமடையாது என்று நமது பாடம் மேலும் காண்பிக்கிறது. சிலர் கேட்பார்கள்; சிலர் பார்ப்பார்கள்; சிலர் பாவமன்னிப்பின் ஆசீர்வாதத்தையும் பரிசுத்த ஆவியின் ஜெனிப்பித்தலையும் பெறுவார்கள். ஆண்டவரும் அவரது அப்போஸ்தலர்களும் இந்த அறிவிப்பை தொடங்கினார்கள். அதுவே இந்த நாளிலும் தொடருகிறது.

ஆனால் நாம் இதில் மனம் தளரக்கூடாது. இயேசுவின் அடிச்சுவட்டை பின்பற்றுகிற, இருதயத்தில் பரிசுத்தமுள்ள சிறுமந்தை மட்டுமே இந்த ஆசீர்வாதத்தை பெற்று ராஜ்ய வகுப்பாரை அமைக்க தயாராயிருப்பார்கள். புது வாசலை, மனுக்குலமும் தெய்வீக பரிசுத்தமும் இணைகின்ற வழியை அமைப்பார்கள்.

சபையானது எப்பொழுது நிறைவடையும் கர்த்தரின் மகிமையானது எப்பொழுது இஸ்ரயேலரின் மேல் பிரகாசிக்கும், அவர்கள் மூலமாக சகல ஜாதிகள், கோத்திரங்கள் மற்றும் பாஷைக்காரர்கள் மேலும் ஆயிரம் வருடமளவும் பிரகாசிக்கும் என்பதற்கு இஸ்ரயேலின் அனுபவங்கள் ஒருஅளவு கோலாக காண்பிக்கிறது. அந்த அளவு கோல் இஸ்ரேல் தேசம் பாழானதையும் முற்றிலும் பலனற்றதாக ஆனதையும், அவர்கள் தேசத்திலிருந்து நீக்கப்பட்டதையும் கூறுகிறது. பாடத்தில் கடைசி வசனம் முடிவில் வேரிலிருந்து ஒருபரிசுத்த வித்து, ஒரு பரிசுத்த ஜனம், தெய்வீக கிருபையின் கீழ் முளைத்து எழும்பும் என்று கூறுகிறது. இஸ்ரயேலின் இந்த பரிசுத்தமானவர்கள், பழைய ஏற்பாட்டு கால விசுவாசிகள் திரைக்கு இந்த பக்கம் உயிர்த்தெழுந்து மேசியாவின் ராஜ்யத்தின் பூமிக்குரிய பிரதிநிதிகள் என்கிற அவர்களது வெகுமதிக்குள் நுழைவார்கள். (எபிரேயர் 11:38-40; சங்கீதம் 148:11) இந்த பிரபுக்களிடம் உண்மையுள்ள விசுவாசமுள்ள, பரிசுத்தமுள்ள யூதர்களை உட்கருவை மேசியாவின் ராஜ்யத்தின் ஆரம்பத்தில் பூமிக்குரிய பகுதியில் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள்.

R4788

## THE FIG TREE IS WITHERED AWAY

## அத்திமரம் பட்டுப்போயிற்று

"பேதுரு நினைவுகூர்ந்து, அவரை நோக்கி: ரபி, இதோ, நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று என்றான்." மாற்கு 11:21

இந்த குறிப்பிட்ட நிகழ்வு நமது கர்த்தரின் பூமிக்குரிய ஊழியத்தில் மிகவும் குறிப்பிடத்தகுந்தது என்று நாம் கருதுகிறோம். அவரது கிரியைகள் எல்லாம் இப்போதைக்கு மட்டுமல்ல, வரக்கூடிய பெரிய காரியங்களுக்கும் சித்திரங்களாக இருந்தன. பிசாசுகளை துரத்துதல் முதலானவைகள் வரவிருக்கிற அவரது ராஜ்யத்தின் மகிமையை காட்டியது, அவரது ராஜ்யம் வரும் போது குருடரின் கண்கள் திறக்கப்படும்; முடவர்கள் அனைவரும் நடப்பார்கள்; உலகத்திற்கு ஆரோக்கியமும் ஆசீர்வதங்களும் இருக்கும். சகல பிசாசுகளும் துரத்தப்படும்.

கர்த்தர் பூமியில் இருந்த போது, வியாதியஸ்தர்கள் அனைவரையும் குணப்படுத்த முயலவில்லை. பெதஸ்தா குளத்தின் அருகேயுள்ள மண்டபத்தில் வியாதியஸ்தனாயிருந்த ஒருவனை நாம் நினைவு கூருகிறோம். இயேசு அவனிடம் வந்து கூறியதாவது: "எப்படி நீ இங்கே இருக்கிறாய்?" அவன் பதில் கூறியதாவது: "தண்ணீர் கலக்கப்படும் போது வேறொருவன் எனக்கு முந்தி இறங்கி விடுகிறான்." இயேசு அவனை நோக்கி, "எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட" என்று கூறினார். மற்றவர்களிடம் எதையும் சொல்லவில்லை. எல்லா வியாதியஸ்தரர்களையும் சுகப்படுத்த அவர் முயற்சி செய்யவில்லை. அவர் தமது வல்லமையை காண்பித்தார். அவர் தமது மகிமையான ராஜ்யத்தை முழுவதுமாக ஸ்தாபிக்கும் போது தமது வல்லமை முழுவதையும் பயன்படுத்துவார்.

காரியங்களை நாம் சரியான முறையில் எடுத்துக்கொள்ளுகிறோம் என்று நினைக்கிறோம். சிறிய காரியங்களாக இருந்தாலும் கர்த்தராகிய இயேசுவின் ஒவ்வொரு சிறு கிரியையும் வரக்கூடிய பெரிய காரியங்களுக்கு தீர்க்கதரிசன பொருளை உடையதாக இருக்கிறது. உதாரணத்திற்கு அவர் இரவிலே படகுக்குள் வருகிறார். ஒரு பெரிய புயல் வந்தது. இயேசு படகுக்குள் வந்தவுடனேயே படகு அவர்கள் போகவேண்டிய கரைக்கு சென்றடைந்தது.

நாம் இப்போது கவனிக்கிற பாடத்தில் இயேசு ஒரு இடத்திற்கு வந்தார். அங்கே ஒரு அத்திமரம் இருந்தது என்று வாசிக்கிறோம். "அத்திப்பழ காலமாயிராதபடியினால்" என்று பொதுவான மொழிபெயர்ப்பில் வாசிக்கிறோம். றானால் "அத்திப்பழ காலம் முடிவடையாதபடியால்" என்று சரியானபடி வாசிக்க வேண்டும். அத்திப்பழ காலத்திற்கு முன்னரே பழத்தை காண இயேசு வந்தது விநோதமாக இருக்கிறது.

அவர் அத்திமரத்தை பார்த்து கூறியதாவது: "இது முதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியை புசியாதிருக்கக்கடவன்." அதன் பின்னர் அந்த அத்திமரம் வேரோடே பட்டுப்போயிருக்கிறதைக் கண்டு பேதுரு, "ரபி சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று" என்று கூறினார். அதற்கு இயேசு"தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாக இருங்கள்" என்று கூறினார். இதன் காரணமென்ன?

### அத்திமரத்திலே இளங்கிளை தோன்றி துளிர்விடும் போது, கோடை காலம் சமீபமாகிவிட்டது என்பதை அறிந்துகொள்ளுங்கள்

அத்திமரம் என்பது யூத தேசத்தை ஒரு நிழலாக அல்லது ஒரு சித்திரமாக காண்பிக்கிறது என்பது நமது புரிந்து கொள்ளுதலாக இருக்கிறது. இயேசு அவர்களிடம் சரியான காலத்தில் வந்து கனிகளை எதிர்பார்த்தார். ஆனால் யூதர்களிடம் வந்து அந்த தேசத்தின் கனியைக் காணவில்லை. தேசத்தின் தலைவர்கள் விழுந்து போனார்கள். ஆயக்காரரும் பாவிகளுமே அவரது செய்தியைக் கேட்க ஆயத்தமாக இருந்தார்கள். தேசத்தின் மேல் அழிவு வந்தது நினைவு கூரப்படுகிறது. இயேசு தனது ஊழியத்தின் கடைசியில் மலையில் ஏறிச் செல்லுகையில் எருசலேமைப் பார்த்து, "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளை கொலை செய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களை கல்லெறிகிறவர்களே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளை கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன். உங்களுக்குகோ மனதில்லாமல் போயிற்று. இதோ உங்கள் வீடு உங்களுக்கு பாழாக்கிவிடப்படும்" என்று கூறினார். (லூக்கா 13:34,35) சீக்கிரத்தில் அது தன் வல்லமையை இழக்க ஆரம்பித்தது. யூத தேசம் 37 வருடங்களுக்கு பிறகு கிபி 70இல் தனது தனித்தன்மையை இழந்தது.

இப்படியாக யூத தேசமானது கல்லறையில், ஹேடஸில் (Hades) இருக்கும் பொழுது, இப்படி இருப்பதாக சொல்லப்படுகிறது. உண்மையில் தனிப்பட்டவர்களாக அவர்கள் கல்லறைக்குச் சென்றிருக்கிறார்கள். ஆனால் தேச அளவிலும் கூட அவர்கள் கல்லறைக்கு சென்றிருக்கிறார்கள், யூத தேசத்திற்கு உயிர்த்தெழுதல் உண்டு என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. "ஒவ்வொரு எலும்பும் தன் தன் எலும்போடே சேர்ந்துக் கொண்டது" என்று கூறி அதன் எழுப்புதலை சித்திரமாக காட்டுகிறது. (எசேக்கியேல் 37:7) இந்த எலும்புகள் இஸ்ரயேல் வம்சத்தாரை குறிக்கிறது. "எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று" என்று குறிப்பிடப்படுகிறது. (வசனம் 11) எங்கள் இலட்சியங்கள் எல்லாம் போய்விட்டன அல்லது உறங்கிவிட்டன!

அந்த தேசத்தின் ராஜ்ய நம்பிக்கைகள் மறுபடியும் புதுப்பிக்கப்பட வேண்டும் என்று தேவன் அவர்களுக்கு சொல்லுகிறார். இயேசு தமது சீஷர்களிடம் பிரசங்கித்த பிரசங்கங்கள் ஒன்றில், அத்திமரம் துளிர்விட்டு அதில் இலைகள் தோன்றும் போது கோடைகாலம் சமீபித்திருக்கிறது என்பதை நாம் அறிய வேண்டும் என்ற கூறுகிறார். அத்திமரம் துளிர்விட்டு இலைகள் தோன்றுவதை நாம் பார்க்கிறோம். (மத்தேயு 24:32; மாற்கு 13:28) யூதர்கள் எருசலேமை திரும்பிப் பார்க்கிறதை நாம் காண்கிறோம். அத்திமரம் துளிர்விட்டு இலைகள் தோன்றுவதை அல்லது ஜீவனை பெறுகிறதை நாம் பார்க்கிறோம். யூத தேசம் மறுபடியும் ஸ்தாபிக்கப்படுவதற்கான காரியங்களை அவர்கள பார்க்கிறார்கள். அப்படிப்பட்ட யூத தேசம் மறுபடியும் இருக்கும் என்று தேவன் கூறுகிறார்.

R4789

## PROPER AND IMPROPER JEALOUSY
## சரியான மற்றும் தவறான பொறாமை

"நேச வைராக்கியம் (பொறாமை) பாதாளத்தைப் போல கொடியதாயிருக்கறது;அதின் தழல் அக்கினித் தழலும் அதின் ஜுவாலை கடும் ஜுவாலையுமாயிருக்கிறது."உன்னதப்பாட்டு 8:6

மற்றவர்கள் மேல் பொறாமை கொள்ளுதல் பாதாளத்தைப்போன்றது. வசனம் கூறுவது போல அது "பாதாளத்தைப்போல கொடியதாயிருக்கிறது." அது மனுக்குலத்தை விழுங்குகிறதாயிருக்கிறது. அது நியாயமற்றதும் மனநிறைவு உண்டாக்காததாகவும் இருக்கிறது. இது குறித்து ஒருவர் கூறியிருப்பதாவது; "பொறாமை என்பது, உணர்ந்து கொண்டாலும் உணர்ந்து கொள்ளாவிட்டாலும் அது இரத்தத்திற்கு தாகமாயிருக்கிறது. எந்த சமயத்திலும் சாதாரணமாக இருப்பதைக் காட்டிலும் கொஞ்சம் பலவீனப்பட்டாலும், பொறாமையானது அது வெறுக்கிற அல்லது நேசிக்கிறவர்களை கொல்லக்கூடியதாக இருக்கிறது." இன்னொருவர் மேல் உள்ள பிரியத்தினால் தான் நீக்கப்படுவோமோ என்கிற பயத்தையோ அல்லது தயவு காட்டும் காரியத்தில் ஒரு போட்டியினால் மிஞ்சப்படுவோமோ என்பதையோ அல்லது பிரபலம் அடைவதிலிருந்து தடுக்கப்படுதலையோ அது குறிக்கிறது.

நமது வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொறாமையானது அன்பின் பேரிலேயோ அல்லது பொறாமை மூலமாக செய்யப்படுகிற மிகவும் தீய வகையான கொடுமையாக இருக்கிறது. அது ஒவ்வொரு கிறிஸ்துவனுக்கும் எதிர்படுகின்ற பெரிய எதிரிகளில் ஒன்றாக இருக்கிறது. அது பகைகள், வன்மம், எரிச்சல், சண்டை போன்றவைகளுக்கு நேசம் உடையதாக இருக்கிறது. அது காணப்பட்டவுடனேயே தேவனுடைய மனிதனுடைய மற்றும் நல்ல கொள்கைகளுக்கு எதிரியாக கருதப்பட்டு கொல்லப்பட வேண்டும். அது ஒரு கணம் இருந்தால் கூட இருதயத்தை தீட்டுப்படுத்தும். பரிசுத்தம் மற்றும் அன்பின் ஆவியினால் சுத்திகரிப்பு வேலை செயல்படுத்தப்பட வேண்டும். அது தனக்குத்தானே ஒரு அசுரனாக மாத்திரமல்ல, அதன் நச்சுப் பற்கள் மற்றவர்களுக்கு துன்பத்தையும் கஷ்டத்தையும் கொடுக்ககூடியதாக இருக்கிறது, மனதானது ஒரு தடவை நஞ்சூட்டப்பட்டால், வெகு சீக்கிரத்தில் அது தனது நிறத்தையும் குணலட்சணத்தையும் கொண்டு வந்து விடும். அதை முழுவதுமாக சுத்தப்படுத்துவது மிகவும் கஷ்டமானதாக ஆகிவிடும்.

### "உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறேன்"

எனினும் அன்பு, ஞானம், பகை, எரிச்சல் போன்ற குணங்கள் தேவனிடம் இருப்பதால் நம்மிடமும் இருக்க வேண்டும். நாம் வாசிக்கிறதாவது: "உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறேன்." ஒரு மனிதனுக்கு வெறுப்பும், எரிச்சலும் தேவனுடைய போக்கிலேயே இருந்தால் அது சரியானது தான். நாம் தேவனைப்போல பாவத்தை வெறுக்க வேண்டும். ஆனால் பாவிகளை அல்ல. தேவனுடைய எரிச்சலானது நீதியானது; நிச்சயமாக அது பாவிக்கு நீதியான தண்டனையைக் கொடுப்பது நிச்சயம். நாம் வேறு தேவனை பெற்றோமானால், அவர் எரிச்சல் அடைவதாக நமக்கு கூறுகிறார். ஆனால் முறையற்ற எரிச்சல் கசப்புத்தன்மைக்கும் விழுந்து போன மானிட மனம் கீழ்ப்பட்டிருக்கிற மற்ற தீய குணங்களுக்கும் வழி நடத்தும். கர்த்தர் தம்மை எரிச்சலுள்ள தேவன் என்று கூறும் போது அவர் நமது முழு அன்பையும் நமது முழு நம்பிக்கையும் எதிர்பார்க்குதலையும் அவர் மேல் வைக்க வேண்டும் என்று விரும்புகிறார். நாம் முழுவதும் அவருக்கு இணக்கமாக இருக்கவும் நமது வாழ்க்கை முழுவதும் அவரது சித்தமே மேலானதாக இருக்க வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார்.

இது சர்வ வல்லவரின் சுயநலம் என்று நாம் நினைக்கக்கூடாது. எனெனில் இது ரத்து செய்யும் அதிகாரத்தின் கீழ் அவருடைய சிருஷ்டிகளுக்கு அதிகப்படியான சந்தோஷம், தற்கால ஜீவியத்தின் காரியங்கள் மற்றும் கடமைகளில் வெற்றி, தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணினவைகளுக்கும் ஆசீர்வாதங்களுக்கும் அவர்களை முழுமையாக ஆயத்தம் பண்ணவும் ஆகும்.

### "உங்களுக்காக தேவ வைராக்கியமான வைராக்கியம் கொண்டிருக்கிறேன்"

பரிசுத்த பவுல், "நான் உங்களுக்காக தேவ வைராக்கியமான வைராக்கியம் கொண்டிருக்கிறேன்" (2கொரிந்தியர் 11:2) என்று கூறும் போது, அவர்கள் மீது அவர் எரிச்சல் கொள்ள தூண்டப்படுகிறார் என்று புரிந்துகொள்ளக்கூடாது. மாறாக அவர் கொரிந்தியர்கள் மேல் அக்கறை கொள்கிறார் என்று புரிந்து கொள்ள வேண்டும், சரியானவைகளுக்காக அவர் வைராக்கியம் கொண்டிருக்கிறார். அவர்களும் அவருக்கு இணக்கமாக இருக்க வேண்டும். ஆகையால் அவரது வைராக்கியம் கர்த்தரின் சத்தியத்தின மேல் ஓர் ஆர்வம், ஆவலுடனான அக்கறை, எச்சரிக்கையான கவனிப்பு மற்றும் ஒரு தேவ வைராக்கியமாக இருக்கிறது. நிச்சயமாக இது சபையில் நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டிய வைராக்கியமாக இருக்கிறது. அப்போஸ்தலர் குறிப்பிடுகிற இந்த நிலைமையிலிருந்து, கிறிஸ்துவுக்குள்ளான எளிமை மற்றும் பரிசுத்தத்திலிருந்து வெளியேறினால் "இவை அனைத்தும் தவறு" என்று உணர வேண்டும். இதை சரிபண்ணுவதற்கு நமது சக்தி மற்றும் அறிவுடன் அனைத்தையும் செய்ய வேண்டும். இதை ஏதாவது ஒரு சபை அங்கத்தினரிடம் காண்போமானால், அது கிறிஸ்துவினிமித்தம் பிரதிபலிக்கும். வேறு எதுவும் தீங்கு இராதபடி அதை சரிபடுத்துவது சரியானது என்ற நாம் உணர வேண்டும்.

கர்த்தரினிமித்தம் நாம் வைராக்கியம் உடையவர்களாயிருந்தால், அது நம் சொந்த விருப்பத்தில் இருக்கும் ஒரு பொறாமையைக் காட்டிலும் வேறானது. வெகுச் சிலரே கர்த்தரினிமித்தம் வைராக்கியம் உடையவர்களாயிருக்கிறார்கள். அவரினிமித்தம் நமது வார்த்தைகளையும், செயல்கள் முதலானவைகளையும் ஆழ்ந்து பரிசோதிப்பது நல்லதாக இருக்கும். நாம் வைராக்கியம் உடையவர்களாயிருக்கும் போது, கர்த்தரினிமித்தம் வைராக்கியம் உடையவர்களாயிருக்கும் போது, அது தனிப்பட்ட முறையிலானதாயிராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். இதை மூப்பர்கள் கவனிப்பது சரியானதாக இருக்குமா என்பதையும் நாம் மூப்பரிகளிடம் செல்வது நமது கடமையா அல்லது இல்லையா என்பதையும் கவனிக்க வேண்டும். கர்த்தரினிமித்தமும் அவரது ஊழியத்தின் நிமித்தமும் நாம் வைராக்கியம் கொண்டிருப்பது ஒரு பெரிய செயல்பாடு. அதே சமயம் நமது தலைப்பு வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல அது கசப்பான வகையை சேர்ந்ததாக இருக்கக்கூடாது. வேறு வார்த்தைகளில் சொல்லுவோமேயானால், நாம் மற்றவர்கள் மேல் பொறாமை கொள்ளாதிருப்பதையும், ஆனால் மற்றவர்களுக்காக, மற்றவர்களின் நலத்திற்காக, அனுகூலத்திற்காக வைராக்கியம் கொண்டிருப்பதையும் நாம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**R4791** DO YOU BELIEVE IN THE RESURRECTION OF THE DEAD?

## மரித்தோரின் உயிர்த்தெழுதலை நீங்கள் நம்புகிறீர்களா?

" அவன் இயேசுவையும் உயிர்த்தெழுதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்தான்." (அப்போஸ்தலர் 17:18

"மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து அவர்கள் கேட்ட பொழுது சிலர் இகழ்ந்தார்கள்." (அப்போஸ்தலர் 17:32)

"மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால் எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா.... கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை.... நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்கள்."1 கொரிந்தியர் 15:13-18

"உயிர்த்தெழுதல்" என்ற வார்த்தையை நினைக்கும்போது, அந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் முப்பத்தி ஏழு தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதே அர்த்தத்தை உடைய பல்வேறு வார்த்தைகளும் உள்ளன. கிறிஸ்தவத்தின் விசுவாச கொள்கையில் உயிர்த்தெழுதல் முக்கியமான வேத போதனையாகவும் நித்திய ஜீவனில் நம்பிக்கையும் அறிவிக்கின்றது. இந்த உண்மைகளின் காரணமாகவும் மேலே குறிப்பிடப்பட்ட வசனத்தின் திடமான வார்த்தையின் காரணமாகவும் எந்த ஒரு கிறிஸ்தவனையும் நீ மரித்தோரின் உயிர்த்தெழுதலை நம்புகிறாயா என்று கேட்பது வினோதமாக காணப்படலாம்.

எனினும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மரித்தோர் உயிர்த்தெழுதலைக் குறித்து கிறிஸ்தவர்களிடையே பரவியிருக்கும் சந்தேகத்திற்கு முக்கியமான காரணங்கள் இருக்கின்றன. ஏனெனில் வேத வாக்கியங்களின் மற்ற போதனைகளைக் காட்டிலும் இந்த உயிர்த்தெழுதல் போதனை மிகவும் முக்கியமானதாக நாங்கள் கருதுகிறோம். இந்த காரியத்தைக் குறித்து பொதுவான கவனத்தை ஈர்க்க நாங்கள் விரும்புகிறோம். வேத வாக்கியங்கள் மற்றும் உண்மைகளின் வெளிச்சத்தில் எங்கள் கேள்வியை ஆராய அழைக்கிறோம். இதைக் குறித்து நாங்கள் சரியாக ஆராய்ந்த பிறகு, தேவனுடைய பிள்ளைகளில் அநேகர் உயிர்த்தெழுதலில் உறுதியாக, நியாயத்தின்படி வேதவாக்கியங்களின்படி நம்பிக்கை கொள்ள வருவார்கள்.

### பிரசங்கம் செய்வதற்கு உயிர்த்தெழுதல் என்ற பாடம் அபூர்வமாக தேர்ந்தெடுக்கப்படுகிறது

"குருவைப் போல ஜனங்கள்" என்பது ஒரு பழைய பழமொழி. போதிக்கப்படும் அல்லது குருமார்களின் கருத்தே சபை மக்களின் பாதுகாப்பாக கருதப்படுகிற நம்பிக்கையாக இருக்கிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து எல்லா சபை பிரிவினரின் கருத்தை ஊர்ஜிதப்படுத்துவது கஷ்டமானதல்ல. ஏனெனில் ஈஸ்டர் ஞாயிறு தவிர மற்ற பிரசங்கங்களில் இந்த தலைப்பு பிரசங்கிக்க எடுத்துக்கொள்ளப்படாது என்று நாங்கள் நம்புகிறோம். எனினும் ஒவ்வொரு அடக்க ஆராதனையிலும் இது சேர்க்கப்படுகிறது. இந்த அநேக சந்தர்ப்பங்களில் போதகர்களும் ஜனங்களும் மரித்தோரின் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை வைக்கிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஒவ்வொரு அடக்க ஆராதனையிலும், கிறிஸ்தவர்களின் நம்பிக்கையாக வைக்கப்பட்டுள்ள அப்போஸ்தலர் பவுலின் வார்த்தைகளை (1கொரிந்தியர் 15) வாசிப்பது ஒரு வழக்கமாக இருக்கிறது என்பது உண்மை. எனினும் அது அந்த ஆராதனையை நடத்துபவரின் சலுகையாக இருக்கிறது. இந்த மரண சம்பந்தத்தைக் குறித்த வசனங்களை வாசிப்பது தனது கடமையாக இருக்கிறது என்று நம்புகிறார். அதிலிருந்து அவர் கூறுவது என்னவென்றால், மரித்து அடக்கம் பண்ணப்பட வேண்டியவர், அவர்களது உறவினர், நண்பர்கள், அயலான் "முன்பைக் காட்டிலும் உயிருடன் இருக்கிறார்" என்று போதகரைப் போல அவர்களும் நம்ப வேண்டும் என்பது தான். மேலும் அவர் "ஆவி நம்பிக்கையுடையவர்கள்," "கிறிஸ்தவ சயின்டிஸ்ட்" என்பவர்களின் கொள்கையைப் போல, அங்கே கூடியிருப்பவர்களைப் பார்த்து இறந்து போனவரின் ஆவி அங்கே அறையில் இருக்கிறது, அவர்களை சுற்றிக் கொண்டிருக்கிறது. மேலும் அது பேச அனுமதிக்கப்பட்டால், "உங்கள் கண்களை துடைத்துக் கொள்ளுங்கள்; எனக்காக அழாதீர்கள், நான் மிகவும் சிறந்த நிலைமையில் மகிமையில் இருக்கிறேன்" என்று கூறக்கூடும்.

### அநேகருக்கு மரணம் என்பது உண்மையான ஒன்றாக இல்லாமல் ஒரு மாயையாக ஆகின்றது

மரணம் என்பது ஒரு மாயை, அது உண்மையானதல்ல என்று பொதுவான நம்பிக்கை உண்மையிலேயே கிறிஸ்தவர்களிடம் வந்திருக்கிறது. அதாவது ஜனங்கள் மரிப்பது போல காணப்படுகிறார்கள்; ஆனால் மரிப்பதில்லை; ஒரு உயர்ந்த நிலையை அடையும், ஒரு மறுரூபமாக அடையும் அனுபவத்தை பெறுகிறார்கள். "கிறிஸ்தவ சயின்டிஸ்ட்" என்று அழைக்கப்படுகிறவர்கள் "மரணமே இல்லை" என்கிற கருத்தை மிகவும் சரி என்று கூறுகிறார்கள்.

இந்த கருத்தை உடையவர்கள் "மரித்தோரின் உயிர்த்தெழுதலை" தொடர்ந்து நம்பமாட்டார்கள். ஏனெனில் யாரும் மரிக்கவில்லை என்றால், எப்படி மரித்தோரின் உயிர்த்தெழுதல் இருக்கமுடியும்? அவர்கள் மரித்ததாக காணப்படுகிறதற்கு முன்னரைக் காட்டிலும் அதிகமான ஜீவனை பெற்றிடும் போது, மரித்தோரின் உயிர்த்தெழுதலைப் பற்றிய பேச்சுக்கு எங்கே இடமிருக்கிறது?

ஆனால் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் இப்படியாக, நமக்கு பதிலளிக்கிறார்கள். "உயிர்த்தெழுதலைப் பற்றி பேசும் போது வெறும் சரீரம் உயிர்த்தெழுவதைப் பற்றியே கூறுகிறோம். நாம் அடக்கம் பண்ணுகிற சரீரம் கல்லறையிலிருந்து திரும்ப இப்படியாக வருகிறது. மரணத்தில் சரீரத்திலிருந்து பிரிந்து போன ஆவிகள் மறுபடியும் உயிர்த்தெழுதலில் அந்த சரீரங்களில் பழைய நிலைக்கு வருகிறது. இதைத்தான் நாங்கள் உயிர்த்தெழுதல் என்று கூறுகிறோம்."

### "தொடர்ந்து, நீ ஒரு சம்பத்து "

நன்று, நன்று! படித்த மற்றும் நன்கு புரிந்துகொள்ளக்கூடிய அநேகரிடையே இப்படிப்பட்ட முரண்பாடு இருக்கின்றன! இந்த கேள்வியுடன் வேத வாக்கியத்தின் பக்கம் செல்வதற்கு முன், இப்படிப்பட்ட எதிர்பார்ப்புகள் வேத வாக்கிய போதனையிலிருந்து மாறுபட்டிருக்கிறது என்று காண்பிப்பதற்கு முன் இந்த ஊழியக்காரர்களின் கருத்துக்களின் முரண்பாடுகளை சோதிப்போம்

1. இறந்து போனவர்கள், மிகவும் நன்றாக இருக்கிறார்கள் என்றும் "மாம்சீக கட்டுக்களிலிருந்து" விடுபட்டிருக்கிறார்கள் என்றும் இப்போது "அவர்களது ஆவிக்குரிய இறக்கைகள் மூலம் தேவனிடம் பறந்து செல்வார்கள் என்றும் அழியக்கூடிய தூசிகள் எதுவும் இனி அவர்களை தடைபண்ணவோ கெடுக்கவோ முடியாது" என்றும் நமக்கு அவர்கள் கூறுகிறார்கள். இன்னும் அவர்கள் இறந்து போனவரின் ஆடம்பரம், சுதந்திரம் மற்றும் ஆசீர்வாதத்தை விளக்குவதில் பரவச நிலைக்கு செல்கிறார்கள். மேலும் இறந்தவர்கள் சரீரத்திலிருந்து விடுதலை அடைந்ததால் பல மடங்கு

அதிகமான அறிவையும் விளக்க முடியாத அளவுக்கு ஆசீர்வாதங்ளையும் பெற்றிருக்கிறார்கள்.

2. அதே மூச்சில் உயிர்த்தெழுதலைப் பற்றிய வேத வாக்கியங்களை தவறான கருத்தில் குறிப்பிடுகிறார்கள். சீக்கிரத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில், புதைக்கப்பட்ட அதே மாம்சீக சரீரங்கள் மறு சீரமைக்கப்படும் என்ற நமக்கு கூறுகிறார்கள். (டாக்டர் டால்மேஜ், தனது புகழ் பெற்ற உயிர்த்தெழுதலைப் பற்றிய பிரசங்கத்தில் உயிர்த்தெழுதலின் காலையைக் குறித்து சித்தரித்துக் கூறுகிறார். பூமியின் பல பகுதியிலிருந்து வரக்கூடிய மனித சரீரத்தின் பாகங்கள் மூலம் வானமானது மறைக்கப்பட்டு இருளடைந்து போகும் என்று சித்தரித்துக் காட்டுகிறார். அவைகள் எல்லாம் விபத்து, வியாதி மூலம் அல்லது நீக்கப்பட்ட விரல்கள், கால்கள் கைகள் முதலியன) பிறகு மரணத்தில் பிரிந்த அந்த ஆவிகள் திரும்பி வந்து நிரந்தரமாக அதே சரீரத்தில் நுழையும் என்று அவர்கள் கூறுகிறார்கள். உயிர்த்தெழுதலானது நமது இரட்சிப்பின் நிறைவாகவும் மகிமையான பலனாகவும் இருக்கும்படி வேதாகம வசனத்தின்படி வைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் உயிர்த்தெழுதலைக் குறித்து தவறாக சித்தரித்ததில் பரவச நிலைமைக்கு பலவந்தமாக செல்லும்படி உணருகிறார்கள். அதன் பலன் வியப்பானதாகவும் மகிமையானதாகவும் இருப்பதாகவும் கூறுகிறார்கள்.

இந்த இரு கருத்துக்களுக்கு உள்ள ஒவ்வாமையை முற்றிலுமாக கவனிக்காததாக தெரிகிறது. இந்த முரண்டபாடான கருத்தை கேட்கிறவர்களும் இதே போல முரண்பாடானவர்களாகவும் நியாயமற்றவர்களாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். (வெளிப்படையாக இவர்களது எதிர்பார்ப்புகள் முழுவதுமாக நியாயப்படுத்தப்படுகிறது. ஏனெனில் கேட்பவர்கள் அந்த முரண்பாடுகளை சுலபமாக விழுங்குகிறவர்களாக இருக்கிறார்கள்). ஆம், அவர்களது நம்பிக்கை எவ்வளவு முரணானதாகவும் நியாயமற்றதாக இருந்தாலும், அவர்கள் மிகவும் பலமான விசுவாசத்தைக் கொண்டிருப்பதற்காக அந்த அளவுக்கு தங்களைத் தாங்களே மெச்சிக் கொள்ளுகிறவர்களாகவும் காணப்படுகிறார்கள். எனினும் உண்மை என்னவென்றால் அவர்கள் அதை எளிதில் நம்பக்கூடியவர்களாக இருக்கிறார்கள். தேவனுடைய வசனம் போதிக்காத, அதற்கு மாறானவைகளை, நியாயமற்றவைகளை நம்புவதால் அவர்கள் வெகுமதியை அடையமாட்டார்கள்.

ஐம்பது வயதுக்குப் பிறகு மரிக்கிற ஒருவன், மரிப்பதினால் நூறு மடங்கு அறிவைப் பெற்று, பிறப்பதற்குரிய உரிமை முதலானவைகளைப் பெற்றால், அவர் உயிர்த்தெழுதலின் மூலம் வருத்தத்துடன் ஏமாற்றமடைவார்கள் என்பதை யார் காணாதிருக்கக்கூடும்? அது அவனுக்கு களிமண் குடியிருப்பில் மறுபடியும் ஜெயிலில் போடுவது போலவும் சரீர பிரகாரமான கட்டுப்பாடுகளையும் மானிட எல்லைகளையும் உடையதாக இருக்காதா? பிறகு நூற்றுக்கணக்கான வருடங்கள் இப்படியாக சுதந்திர ஆவியாக இருந்து அண்டசராசரத்தையும் சுற்றி வந்து, சரீரம் மற்றும் சரீர பிரகாரமான எல்லையில்லாமல் தங்கு தடையின்றி இருந்தவர்களை மறுபடியும் ஒரு மானிட சரீரத்தில் அடைப்பது தேவனுடைய பங்கில் சரியானதாக இருக்குமா? அவர்களுக்கு நூற்றுக்கணக்கான வருட சுதந்திரத்தில் மானிட வல்லமைகளும் பயன்களும் மறந்து போயிருக்கும். அடக்க ஆராதனை நடத்துபவர் பிரசங்கிப்பது போல சரீரமில்லாமல் இருப்பது "பேரின்ப நிலையென்றால்," ஒரு உயிர்த்தெழுதலினால் சரீரத்தில் வைப்பது சிறைவாசமாக இருக்காதா?

**வேத வாக்கியங்களானது ஒரே நம்பிக்கையை ஆசீர்வாதமான நம்பிக்கையை, உறுதியான நம்பிக்கையை கொடுக்கிறது**

நாம் இதுவரை பார்த்ததிலிருந்து, கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் வேத வாக்கியங்கள் போதிக்கிற உயிர்த்தெழுதலையோ (மரித்தோரின் உயிர்த்தெழுதல்) அல்லது அவர்களே போதித்துக்கொள்ளுகிற சரீரத்தின் ஒரு உயிர்த்தெழுதலையோ நம்பவில்லை என்று நாங்கள் யூகித்ததை நியாயப்படுத்தியிருக்கிறோம். நமது பாடத்தின் இந்த முகவுரையுடன், மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து வேத வாக்கியங்கள் என்ன சொல்லுகிறது என்பதை பார்ப்போம். எந்த வகையில் வேத வாக்கியங்கள் உயிர்த்தெழுதலை ஒரு நம்பிக்கையாகவும், ஒரே நம்பிக்கையாகவும், ஆசீர்வதிக்கப்பட்ட நம்பிக்கையாகவும் "முதலாம் உயிர்த்தெழுதலில்" பங்கு பெறப்போகிற கர்த்தருடைய ஜனங்களுக்கு மாத்திரமல்ல, பொதுவாக உலகத்திற்கும் இருக்கும் என்று கூறுகின்றன என்பதைப் பார்ப்போம். உலகமானது நியாயத்தீர்ப்பின் உயிர்த்தெழுதலைக் பெறும். "நித்திய ஆக்கினையின் உயிர்த்தெழுதல்" என்பது தவறான மொழிப் பெயர்ப்பு (யோவான் 5:29)

உயிர்த்தெழுதலைக் குறித்த வேத வாக்கியங்களின் போதனையை நம்புகிறவர்கள், மரணத்தைக் குறித்து வேதம் போதிக்கிறதை, மரணம் என்பது மரணம் தான் என்பதையும் மற்றும் ஜீவன் அற்றுப்போகுதல் என்பதையும் நம்ப வேண்டும். அதுவரை அவன் நமது தலைப்பு வசனத்தில் அப்போஸ்தலரின் வார்த்தைகளை புரிந்து கொள்ள இயலாது. "மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லையென்றால்... கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே." அப்போஸ்தலரின் இந்த கூற்று ஒரு விதி விலக்காகவோ அல்லது வேறு இடத்தில் சொல்லப்பட்ட வேத வாக்கியங்களின் போதனைக்கு மாறானதாகவோ இல்லை. அவர்களது ஒரு மனதான சாட்சியம் மரணம் என்பது மரணமே ஆகும். அதாவது, "அந்நாளில் அவனது யோசனைகள் அழிந்துபோம், " (சங்கீதம் 146:4) மேலும் வேத வாக்கியங்கள் கூறுகிறதாவது: "அவன் பிள்ளைகள் கனமடைந்தாலும அவன் உணரான்; அவர்கள் சிறுமைப்பட்டாலும் அவர்களைக் கவனியான்." "நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமுமில்லையே." (யோபு 14:21; பிரசங்கி 9:10)

**நாம் யாரை நம்புவது – தேவனா அல்லது சாத்தானா?**

இங்கே நவீன போதகர்களுக்கும் தேவனுடைய வார்த்தைகளுக்கும் இடையே முரண்பாடு இருக்கிறது. மரித்தோர் ஒன்றும் அறியார்கள் என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. ஆனால் நவீன இறையிலாளர்கள் அவர்களுக்கு (மரித்தோர்) எல்லாம் தெரியும் என்று கூறுகின்றனர். மரணம் என்பது உண்மையாகவே மரணம் என்றும் "நீ சாகவே சாவாய்" என்று பாவத்திற்காக நமது இனத்திற்கு கொடுக்கப்பட்ட தெய்வீக தண்டனையின்படி உண்மையிலேயே பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும் வேதாகமம் கூறுகிறது. எதிர்ப்பாளர்கள் சாத்தான் ஏவாளிடம் கூறிய வஞ்சக வார்த்தையாகிய "நீங்கள் சாகவே சாவதில்லை" என்பதை எடுத்துக்கொள்ளுகிறார்கள். மேலும் மரித்தவர்கள் உண்மையாகவே மரிக்கவில்லை என்று நிரூபிக்க முயலுகிறார்கள். பாவத்திற்கு எதிரான தேவனுடைய தண்டனை அமுலுக்கு வரவில்லை என்றும் மரணமானது

நமது இனத்தின் மேல் கொடுக்கப்பட்ட தண்டனை அல்லது சாபமாக இராமல் ஒரு ஆசீர்வாத பரிணாமத்தில் அடுத்த பொதுவான செயல்பாடாக இருக்கிறது என்றும் கூறுகிறார்கள். இந்த இரண்டு கொள்கைகளும் துருவங்களைப் போல எதிரெதிராக இருக்கின்றன. இந்த கொள்கைகளின் இரண்டு போதகர்கள் நாம் காண்பித்தது போல, ஒரு பக்கம் தேவனும் இன்னொரு பக்கம் "ஆதியிலிருந்தே பொய்யனாக இருக்கக்கூடிய சாத்தானும்" இருக்கிறார்கள். நாம் எதை நம்புவது?

இரட்சிப்பின் முழு திட்டமும் இந்த கேள்வியோடு இணைந்திருக்கிறது. மரணம் என்பது ஆதாம் மூலமாக சுதந்தரித்துக்கொண்ட பாவத்திற்கான தண்டனையாக இல்லாதிருந்தால், பிறகு "ஜீவனும் பரிபூரணமும்" இயேசு கிறிஸ்து மூலமாக உயிர்த்தெழுதலில் கொடுக்கப்படுகிற வெகுமதியும் தேவனுடைய ஆசீர்வாதமும் அல்ல. பரவலாக கர்த்தருடைய ஜனங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் அவர்களது மனதில் செல்வாக்கை ஏற்படுத்தியதுமான சாத்தானுடைய கூற்று, தேவனுடைய கூற்றுக்கு, வார்த்தையின் ஒவ்வொரு பொருளுக்கும் தலைகீழானதாக இருக்கிறது. அதாவது நமது வசனத்தில் அப்போஸ்தலர் கூறுவது போல மரணம் என்பது பாவத்திற்கான தண்டனை அல்லது சாபம் என்பதற்கும், இந்த தண்டனை அல்லது சாபத்திலிருந்து மனிதனை விடுவிக்கவே கிறிஸ்து மரித்தார், அந்த விடுதலை உயிர்த்தெழுதலின் மூலம் வருகிறது, இல்லையென்றால் எதிர்கால ஜீவன் கிடையாது என்பதற்கும் எதிராக இருக்கிறது. சாத்தானுடைய தத்துவம், மரணம் என்பது ஒரு ஆசீர்வாதம் என்றும் அது வாழ்க்கையின் நிறைவையும் சந்தோஷத்தையும் சுதந்திரத்தையும் கொண்டு வருகிறது, என்றும் உயிர்த்தெழுதலானது, சிறைவாசத்தையும் கஷ்டத்தையும் கட்டுப்பாடுகளையும், வலிகளையும் துன்பங்களையும் கொண்டு வருவதாக அறிவிக்கிறது.

## அப்போஸ்தலர்கள் இயேசுவையும் உயிர்த்தெழுதலையும் போதித்தார்கள்

எதிராளியின் இந்த வஞ்சகத்தினால் கிறிஸ்தவத்தின் பெரும்பாலான மகா இறையிலாளர் மற்றும் அவர்களது அநேக பின்னடியார்களும் வஞ்சிக்கப்பட்டிருப்பதில் ஆச்சரியமேதுமில்லை. "மனிதனால் (ஆதாம்) மரணம் உண்டானபடியால் மனுஷனால் (மனிதனாகிய கிறிஸ்து இயேசு) மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று; ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" என்று அறிவிக்கிற பாவ நிவாரண போதகத்தை விட்டுவிடுகிறார்கள். (1கொரிந்தியர் 15:21,22)

மரணத்தின் மெய்மை மறுக்கப்பட்டால், பாவத்தின் மெய்மையை மறுப்பதில் எந்தவித கஷ்டமும் இல்லை. தகப்பனாகிய ஆதாம் தேவனுடைய சாயலிலும் ரூபத்திலும் சிருஷ்டிக்கப்படவில்லை என்று கோரப்பட்டால், அவன் குரங்கின் சாயலிலும் ரூபத்திலும் சிருஷ்டிக்கப்பட்டதாக கூறப்படும். அப்படியானால், இந்த கீழான அறிவின் நிலைமையில் நித்திய ஜீவனுக்கான சோதனைக்கு தகுதியற்றவனாக இருந்திருப்பான். மேலும் அவன் சோதனைக்கு உட்படுத்தப்பட்டான் என்பதும் அதில் அவன் தோல்வியடைந்து கிருபையிலிருந்து விழுந்து போனான் என்பதும் மறுக்கப்படுவதாக இருக்கும். விழுகை மறுக்கப்பட்டால், மனிதன் தற்கால நிலைமைக்கு முன்னேறியிருக்கிறான், குரங்கின் சாயலிலிருந்து முன்னேறி தேவசாயலுக்கு முன்னேறியிருக்கிறான், அதன்பிறகு அடுத்த நிலையை எடுக்க சரியானதாக இருக்கும். மனிதன் விழவில்லையாதலால், விழுகையிலிருந்து மீட்கப்படுவது அவசியமற்றது என்று அறிவிக்கலாம்.

இந்த தப்பறையான வேதாகம நியாயப்படுத்தலின் மூலம், கர்த்தராகிய இயேசு நமது இரசட்கர் என்று அடிக்கடி அறிவிக்கிற தேவனுடைய வார்த்தையை மறுப்பது நியாயமானதாக காணப்படுகிறது. "நம்முடைய பாவங்களை (சபையின் பாவங்களை) மாத்திரமல்ல சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாகிருக்கிறார் " என்பதையும் மறுப்பது நியாயமானதாக காணப்படுகிறது. அவர் ஆதாமின் ஜீவாதார உரிமையை பெறுவதற்காக தமது சொந்த ஜீவனை நமது மீட்கும் பொருளாக அல்லது சரிசமமான விலைக்கிரயமாக கொடுத்திருக்கிறார்.

தற்கால கிறிஸ்தவ பிரபலமான வெளிச்சம், சுவிசேஷத்தின் முக்கிய அம்சங்களை இப்படியாக மறுக்கிறதை நாம் காண்கிறோம். அப்போஸ்தலர் "இயேசுவையும் உயிர்த்தெழுதலையும்" பிரசங்கித்தார். அதாவது இயேசு பாவத்திலிருந்தும் அதன் சாபமாகிய மரணத்திலிருந்தும் மனுக்குலத்தை இரட்சிப்பவர்; உயிர்த்தெழுதல் என்பது இரட்சிப்பின் வேலையின் மாபெரும் பலன். அதன் மூலம், இந்த யுகத்தின் நிபந்தனையின்படி நித்திய ஜீவனை ஏற்றுக்கொள்ள விரும்புகிறவர்களுக்கு ஆசீர்வாதம் மீட்கும் பொருள் – பலியின் மூலமாக உறுதியாக செய்யப்படுகிறது. தற்கால அவிசுவாசிகளைக் குறித்து நமது கர்த்தரே தமது சொந்த வார்த்தைகளில் சொன்னவைகளை நாங்கள் ஞாபகப்படுத்துகிறோம். அவர் கூறுகிறதாவது: "மனுஷகுமாரன் வரும் போது பூமியில் விசுவாசத்தைக் காண்பாரோ?" (லூக்கா 18:8)

## ஐம்புலன்களும் வேத வாக்கியங்களுக்கு இசைவாய் இருக்கின்றன

மரணத்தைக் குறித்து வேத வாக்கியங்கள் கூறுகிற அனைத்தும் நமது சிருஷ்டிகர் நமக்கு அளித்திருக்கும் ஐந்து புலன்களுக்கும் இசைவாக இருக்கின்றன. இதைத்தான் நாம் எதிர்பார்க்க வேண்டும். தெய்வீக வெளிப்படுத்தல்கள் நமது உணர்வுகளுக்கு மாறானதாக இருந்தால், நமது புலன்களில் தவறு இருப்பதை நாம் ஏற்றுக்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும். ஆனால் ஒரு மானிட கோட்பாடு நமது புலன்களுக்கும், வேத வாக்கியங்களின் அறிக்கைக்கும் மாறுபாடானதாக இருக்கும் பொழுது அந்த கோட்பாடு நிராகரிக்கப்பட வேண்டும். புலன்களின் சாட்சியம் சரியானதாக இருக்கும். இப்படியாக தேவன் கொடுத்த புலன்களை(பாவத்தினால் சேதமடைந்திருந்தாலும்)யும் தெய்வீக சட்சியத்தையும் நிராகரித்தால் அவன் இருளுக்கும் இடறுதலுக்கும் வழிநடத்தப்படுவதைத் தவிர வேறு எதையும் எதிர்பார்க்க தேவையில்லை. இக்காலத்திலும் பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பு நடந்ததைப் போல குருடனுக்கு குருடன் வழிகாட்டி இருவரும் அவிசுவாசம் மற்றும் தப்பறை என்னும் குழியில் விழுகிறார்கள்.

## இவைகள் சாகிறது போலவே, அவர்களும் சாகிறார்கள்; அவர்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே

தேவனுடைய சாட்சியத்தைப் போலவே நம்முடைய புலன்களின் சாட்சியமும், மரணம் என்பது ஜீவனை இழந்து போதல், ஜீவனின் அபிவிருத்தி அல்ல என்று கூறுகின்றது. மரிக்கிறவர்களை கவனியுங்கள். அவனது சரீரம் மற்றும் மனதின் சக்திகள் ஜீவன் போகும் வரை குறைந்து கொண்டே போவதைப் பாருங்கள். அவனிடமிருந்து எதையும போவதை நீங்கள் பார்க்கவில்லை. மரண பிதற்றலைத் தவிர வேறு எதையும் உங்களால் கேட்டிருக்க முடியாது. நாடித்துடிப்பு குறைந்து கொண்டே போவதை உணரலாம்; மூச்சுத்திணரலை கவனிக்கலாம். நீங்கள் சோதித்து அறிந்து உங்கள் புலன்கள் அனைத்தும் உங்கள் நண்பன், உங்கள் அன்பானவர்

இறந்துவிட்டார், உயிரோடில்லை என்று உணர்த்துகின்றன. உங்களைச் சுற்றிப் பார்த்து, இந்த விஷயத்தை ஆராய்ந்து மற்றவர்களிடம் "அடுத்து என்ன?" என்று கேட்கிறீர்கள். உங்கள் புலன்களுக்கும் பதில், "அடுத்தது அழிவு என்பது ஆகும். உயிர் போனவுடன் அந்த உடல் மண்ணுக்கு மண்ணாகவும் சாம்பலுக்கு சாம்பலாகவும் அடக்கம் பண்ணப்பட வேண்டும்." உங்கள் நண்பனுடைய மரணத்திற்கும் ஒரு மிருகத்தின் மரணத்திற்கும் ஒற்றுமை இருப்பதை கவனியுங்கள். உங்கள் புலன்கள் அவர்களுக்கிடையே எந்த வித்தியாசத்தையும் உணரவில்லை. வேத வாக்கியங்கள் கூறுகிறதாவது: "இவைகள் சாகிறது போலவே அவர்களும் சாகிறார்கள்; ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே. " (பிரசங்கி 3:19)

ஆனால் ஒரு எதிர்கால வாழ்க்கையை விரும்பி, நமது சிருஷ்டிகர் நமது இயற்கையான சுபாவத்தில் , நம்பிக்கையே இல்லையா? மனிதன் மிருகத்தைக் காட்டிலும் உயர்ந்தவன் இல்லையா என்று நீங்கள் கேட்கும்படி வைத்திருக்கிறார். வேத வாக்கியங்கள் உங்கள் கேள்விக்கு பதில் சொல்லுகிறது. சரீர பிரகாரமாக பார்க்கும் போது "மிருகத்தைப் பார்க்கிலும் மனுஷன் மேன்மையுள்ளவன் அல்ல" என்று உறுதியாக சொல்லுகிறது. ஆனால் மனிதன் மிருகத்தைக் காட்டிலும் அதிக வல்லமையை உடையவனாக இல்லாதிருந்த போதிலும், சிருஷ்டிகர் மிருகங்களுக்கு செய்யாத ஒன்றை மனிதர்களுக்கு தேவன் வைத்திருக்கிறார். அதாவது நாம் விரும்புகிற நித்திய ஜீவன் ஆகும். இந்த நித்திய ஜீவனை ஆரம்பத்திலேயே தேவன் கொடுத்திருந்தார் என்று வேத வாக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மரணமற்ற ஜீவனை மனிதனுக்கு கொடுக்காதபடி, ஜீவனை தக்கவைக்கிற ஜீவ விருட்சத்தின் கனியை ஏதேனில் வைத்து, அதன் மூலம் ஜீவனை தொடர்ந்து பெற்றிருக்கும்படி செய்தார். எனினும் இந்த நிலைமை நிபந்தனைக்குட்பட்டது. அவன் தன் சிருஷ்டிகருக்கு கீழ்ப்படிந்திருப்பதைப் பொருத்து இருக்கிறது.

மனிதனுடைய கீழ்ப்படியாமை அவனுக்கு மரண தண்டனையைக் கொண்டு வந்தது. அந்த தண்டனையை நிறைவேற்றுதவதற்கு ஜீவ விருட்சத்தின் கனியை புசிக்காதபடி ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டான். இப்படியாக வெளியேற்றப்பட்டு, "நீ சாகவே சாவாய்" என்ற தண்டனை படிப்படியாக நிறைவேற்றப்பட்டு, ஏறக்குறைய முதல் ஆயிரம் வருட முடிவு வரை வாழ்ந்து ஆதாம் மரித்தார். அவரது சந்ததி, காலம் செல்லச்செல்ல, பலவீனப்பட்டு தற்போது (விஞ்ஞானம், மருத்துவம் மற்றும் சுகாதார முறைகள் முன்னேறியிருந்தும்) மனிதனின் ஆயுசு நாட்கள் சாராசரியாக முப்பத்து ஐந்து வருடங்களுக்கு குறைந்திருக்கிறது. மனிதனின் ஆயுசு நாட்கள் பலத்தின் மிகுதியால் எண்பது வருடமாக இருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே. "ஜீவனுள்ளோர் தேசத்திலிருந்து அறுப்புண்டு," "சத்துருவின் தேசத்திற்கு செல்கிறான். " அதாவது மரணம் என்கிற சிறை வீட்டிற்கு செல்கிறான். முன்னரே அதில் இருபதாயிரம் மில்லியன் ஜனங்கள் இருக்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. "துன்மார்க்கருடைய தொந்தரவு அங்கே ஒய்ந்திருக்கிறது. பெலனற்று விடாய்த்துப் போனவர்கள் அங்கே இளைப்பாறுகிறார்கள்." (யோபு 3:17-19)

### "அநீதியுள்ளவர்களுக்கு பதிலாக நீதியுள்ளவராய் இயேசு மரித்தார் "

மரித்தோரைக் குறித்த நமது கேள்விகளுக்கு வேத வாக்கியங்கள் பதிலளிக்கின்றன. தெய்வீக தண்டனையாகிய மரணத்தை அது நியாயப்படுத்தி உறுதிப்படுத்துகிறது. எனினும் அது நமது சிருஷ்டிகரை இரக்கமும் தயவுமுள்ள தேவன் என்று அறிவிக்கிறது. மேலும் நம்மை விடுவிக்க இரக்கமும் கரங்களும் இல்லாதபோது, அவரது கரம் நமக்கு இரட்சிப்பைக் கொண்டு வந்தது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து யேகோவாவின் கரமாக இருக்கிறார் என்றும், அவர் நம்மை துன்பம், வலி, பாவம் மற்றும் வியாதியிலிருந்து விடுவிக்கவும், மரணமாகிய சிறை வீட்டிலிருந்து இரட்சிக்கவும், தேவனுடைய பிள்ளைகளின் சுதந்தரம் மற்றும் சலுகைகளை நாம் திரும்பப் பெறவும், கரங்களை நீட்டினார் என்று வேத வாக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

நமது மீட்புக்காகவும், நமக்கு மீட்கும் பொருளைக் கொடுக்கவும், தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை ஏற்ற காலத்தில் அனுப்பினார் என்பது தெய்வீக இரக்கத்திற்கு இசைவாய் இருந்தது. இறுதியாக, தெய்வீக இரக்கத்தை ஏற்றுக்கொள்ளுகிற அனைவரையும். விழுகையினால் வந்த அனைத்து விளைவுகளிலிருந்தும் மரித்தோரின் உயிர்த்தெழுதல் மூலமாக மீட்கவும் அனுப்பினார். ஆனால் தெய்வீக அன்பு, தெய்வீக நீதியை ஒன்றுமில்லாததாக்காது. இயேசுவை விசுவாசிக்கிறவர்களை அவர் நீதிமானாக்கிறவரா -யிருந்தால், தேவன் நேர்மையாக இருப்பது அவசியம். எனவே நீதியின் தேவை, பாவத்திற்கு தண்டனை, விடுதலை மற்றும் திரும்பக் கொடுத்தலின் வேலை ஆரம்பிப்பதற்கு முன் நமது இரட்சகரால் கொடுக்கப்பட வேண்டும். இங்கே பாவத்திற்கான தண்டனை என்ன என்பதற்கும், என்ன இல்லை என்பற்கும் ஆதாரத்தை நாம் இங்கே பெற்றிருக்கிறோம். ஏனெனில், நமது கர்த்தராகிய இயேசு பாவத்திற்கான நீதியான தண்டனையை நமக்காக செலுத்துகிறதினால், நமக்காக அவர் எதைக் கொடுத்தாரோ அதுவே நமக்கு எதிரான தண்டனையாக இருந்தது. அவர் நமக்காக என்ன செய்தார்? அவர் நமக்காக தன் ஜீவனைக் கொடுத்தார் என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன; "நமது பாவங்களுக்காக அவர் மரித்தார்." "அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராக அவர் மரித்தார்." அவர் "தமது ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினார்." அவர் "தமது ஆத்துமாவை (நமது ) குற்றநிவாரண பலியாக ஒப்புக்கொடுத்தார்." "அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம். " (ஏசாயா 53:4-6; 10,12)

நமது இரட்சிப்பின் விலைக்கிரயமாக நமது கர்த்தராகிய இயேசு நித்திய ஆக்கினையை அனுபவிக்கவில்லை என்பதை காட்டிலும் பெரிய நிரூபணம் ஏதுமில்லை. ஆகையால் இந்த காரியத்திற்கு நிரூபணம் தேவைப்பட்டால், நித்திய ஆக்கினை நமது பாவத்திற்கான தண்டனை இல்லை என்கிற நிரூபணத்தை இங்கே நாம் பெற்றிருக்கிறோம். மாறாக, நமது கர்த்தராகிய இயேசு நமது பாவங்களுக்காக மரித்தார் மற்றும் பரலோக பிதாவானவர் நமது சார்பாக அவரது பலியை ஏற்றுக்கொண்டார் என்கிற உண்மை பாவத்தினால் நாம் இழந்தது ஜீவன் என்பதை நிரூபிக்கிறது. நமது இனத்திற்கு எதிரான தெய்வீக பிரமாணத்தின் தண்டனை ஜீவனை இழத்தலாக இருந்தது. மரண தண்டனையின் கீழாக முழு மனுக்குலமும் மரணத்தின் மாபெரும் சிறை வீட்டிற்கு, கல்லறைக்கு, ஷியோலுக்கு, ஹேடஸ்ஸுக்கு சென்றிருக்கிறது. ஆகையால் நமது அன்பான இரட்சகரும் நமக்காக ஜீவனை கொடுத்தபோது, ஷியோலுக்கு, ஹேடஸ்ஸுக்கு, கல்லறைக்கு சென்றார். அவர் நமது இடத்தை எடுத்துக்கொண்டு நமக்காக நமது பாவங்களுக்காக தண்டனையை அனுபவித்தார்.

ஆனால் இயேசுவின் மரணம் மனிதனை மரண தண்டனையிலிருந்து விடுவிக்கிறது. ஆகையால் மரணத்திலிருந்து அவரது உயிர்த்தெழுதல், அவரை ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிகிறவர்களுக்கு நீதிமானாக்கப்படுதலை உறுதிப்படுத்தியது. மீட்கும் பொருளின் விலைக்கிரயம் முற்றிலுமாக திருப்திகரமாக இருந்தது என்பதற்கான ரூபகாரத்தை பிதாவானவர்

அளித்தார். இப்படியாக பிதாவானவருக்கு கீழ்ப்படிந்திருந்து நமது கர்த்தர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்டார். பிதாவானவரின் ஏஜெண்டாகவும் பிரதிநிதியாகவும் இருந்து விரைவில், அவரது விலையேறப் பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்ட முழு உலகத்தையும் ஆசீர்வதிக்கும் வேலையை ஆரம்பிப்பார்.

### மரணத்தின் சிறை வீடு திறக்கப்பட்டு, கைதிகள் விடுவிக்கப்படுகிறார்கள்

உலகத்தின் ஆசீர்வாதம் என்பது சிறைவீட்டை திறந்து கைதிகளை விடுவிப்பதாகும். அவர்கள் கடந்த ஆறாயிரம் வருடங்களாக மரணத்தின் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தார்கள். இந்த காரணத்தினால் தான் நமது கர்த்தர் ஜீவனை அளிப்பவர் என்று அழைக்கப்படுகிறார். ஏனெனில் ஆதாமில் ஜீவனை இழந்த உலகத்தின் மனுக்குலத்திற்கு ஜீவனை திரும்பக் கொடுப்பது அவரது மாபெரும் வேலையாக இருக்கும். மனுக்குலத்திற்கு ஜீவனை திரும்ப கொடுப்பது அவர்களது வலிகளையும், நோய்களையும், கஷ்டங்களையும் நீக்குவது என்று பொருள்படும். இவைகளெல்லாம் மரணத்தின் செயல்பாடுகளாக இருப்பதால் நமது இரட்சகர் மாபெரும் மருத்துவர் என்று அழைக்கப்படுகிறார்.

மரணத்தின் சிறை வீட்டைத் திறந்து, கைதிகளை விடுவித்தார் (ஏசாயா 42:6) என்ற தீர்க்கதரிசனம் சந்தேகத்திற்கு இடமளிக்காதபடி சரியாக நமது கர்த்தரால் அவருக்கே பிரயோகிக்கப்பட்டது. ஆனால் அவர் தமது உயிர்த்தெழுதலில் உடனே மரணத்தின் சிறை வீட்டை உடைத்து சகல கைதிகளையும் உயிர்த்தெழுதலின் மூலம் விடுவிக்கவில்லை. இந்த வேலை எப்போது நடக்கும் என்பது பற்றி அவர் கூறுகிறதாவது: "பிரேதக்குழியிலுள்ள அனைவரும் மனுஷ குமாரனுடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்." (யோவான் 5:25-29) "அதைக்கேட்கிறவர்கள் (அவரது சத்தத்துக்கு கீழ்ப்படிகிறவர்கள் அப்போஸ்தலர் 3:22) ஜீவிப்பார்கள்."

நமது கர்த்தர் இப்படியாக சுவிசேஷ யுகத்தின் இடைக்காலத்தை கடந்து சென்றார். அவர் வருகிற யுகத்தில் நிறைவு செய்யப்போகிற அவரது மாபெரும் வேலையை குறிப்பிட்டார். ஏனெனில் அது பிதாவானவரின் முன்னேற்பாடு செய்யப்பட்ட திட்டம். பிதாவானவர் தமது குமாரனை அனுப்பினார்; குமாரனும் மீட்கும் வேலையை "இளைப்பாறுதலின் காலத்திற்கு" அல்லது உயிர்த்தெழுதலின் காலத்திற்கும் மேசியாவின் ஆளுகையில் உலகின் பொதுவான ஆசீர்வாதத்துக்கும் முன்னதாக விருப்பத்துடன் எடுத்துக்கொண்டார். இந்த சுவிசேஷ யுகத்தின் காலத்தை உலகத்திலிருந்து, ஒரு "சிறு மந்தையை," "ராஜரீக ஆசாரியர்களை" "பரிசுத்த ஜாதியை" "சொந்த ஜனத்தை" தெரிந்து கொள்ளுகிற இன்னொரு வேலையை எடுத்துக்கொள்ளுகிறார். அவர்கள் மத்தியஸ்த ராஜ்யத்தின் கனத்தில் அவர்களது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் உடன்சுதந்தரராக இருப்பார்கள். அவர்கள் அந்தகாரத்தின் அதிபதியை அழிக்கும் மாபெரும் மகிமையான வேலையிலும், அறியாமை, பாவம், மூட நம்பிக்கை ஆகியவற்றின் கைதியாக இருந்தவர்களை மரணத்தின் சிறை வீட்டை உடைத்து திறந்து விடுதலை பண்ணுகிறதிலும், முற்பிதாவாகிய ஆபிரகாமிடம் அவரது சந்ததிக்குள் (கிறிஸ்துவும் அவரது தெரிந்துகொள்ளப்பட்ட சரீரமாகிய சபையும்) "சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" என்று தேவன் பண்ணின வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதிலும் இரட்சகருடன் இணைந்திருப்பார்கள். (கலாத்தியர் 3:8,16,29)

### "முதலாம் உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்"

இந்த வேத வாக்கிய கூற்று முதலாம், பிரதானமான அல்லது விசேஷித்த உயிர்த்தெழுதல் உண்டு என்றும் அதன் பிறகு பொதுவான உயிர்த்தெழுதல் உண்டு என்றும் நமக்கு வெளிப்படுத்துகிறது, இந்த முதலாம் அல்லது உயர்ந்த உயிர்த்தெழுதல் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும் அவரது சரீரமாக தெரிந்தெடுக்கப்படுகிற சபையையும் உள்ளடக்கியது; இதற்கு அதிகமாகவும் இல்லை, இதற்கு குறைவாகவும் இல்லை. "முதலாம் உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக இருந்து அரசாளுவார்கள்." இவர்கள் மேசியாவின் ராஜ்ய வகுப்பார். முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குள்ளவர்கள் மானிட சுபாவத்திலிருந்து தெய்வீக சுபாவத்திற்கு, ஆவியின் சுபாவங்களிலேயே உயர்ந்த சுபாவத்துக்கு உடனடியான மறுரூபமாக்கப்படும் அனுபவத்தை பெறுவார்கள், மானிட சரீரமோ, மாம்சமும்இரத்தமும் உடையதோ அல்ல; ஏனெனில் "மாம்சமும், இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்காது." சிலர் "மாம்சமும் இரத்தமும்" என்கிற சொற்றொடரில் குழப்பமடைகிறார்கள். அது மானிட சுபாவத்தை குறிக்கிறது என்பதைக் காண தவறுகிறார்கள். இதே சொற்றொடர் அதே புதிய ஏற்பாட்டு ஆசிரியரால் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற வசனத்தை சோதிக்கும்படி அழைக்கிறோம். அப்படிச் செய்வதால் நம்முடைய விவரித்தலின்படி. வேதவாக்கியங்களின்படி மானிட சுபாவம் என்பதை ஏற்றுக்கொள்வார்கள். இந்த சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ள கீழ்க்கண்ட வசனங்களை பார்க்கவும்: மத்தேயு 16:17; யோவான் 3:5,6; 1 கொரிந்தியர் 15:50) அவர்களது சோதனையும் அவர்களது இருதயத்தை பூரணப்படுத்துகிற வேலையும் முன்னமே நடைபெறுகிறது. அதில் ஜெயங்கொண்டவர்கள் மட்டுமே ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள். அவர்களது குணலட்சண மாற்றங்களில் சில. பலவீனத்திலிருந்து வல்லமை, அபகீர்த்தியிலிருந்து மகிமை, அழிவிலிருந்து அழியாமை, ஒரு இயற்கையான (மானிட) சரீரத்திலிருந்து ஆவிக்குரிய சரீரம் என்று அப்போஸ்தலரால் குறிப்பிடப்படுகிறது.

வேதாகமத்தில் எல்லா இடங்களிலும் குறிப்பிட்டிருப்பது போல உயர்ந்த, மேலான உயிர்த்தெழுதல் சுவிசேஷ யுகத்தின் முடிவில் முழு சுவிசேஷ யுக சபையும் நிறைவடையும் போது இருக்கும். ஜீவிக்கும் அங்கங்களின் ஆவியின் சுபாவத்திற்கு "மறுரூபமடைதல்" இதில் உள்ளடக்கியிருக்கிறது. மானிட ஜீவிகளாக அவர்கள் மரிக்கும் தருணம், அவர்கள் பூரண ஆவியின் ஜீவியாக "மறுரூபம்" அடைகிற தருணமாக இருக்கும். மரித்திருக்கிற கர்த்தருடைய ஜனங்கள் மற்ற மானிடர்களைப் போல மனித ஜீவியாக உண்மையில் மரித்திருக்கிறார்கள்; ஒன்றும் அறியார்கள். தேவன் அவர்களுக்கு உயிர்த்தெழுதலை வைத்திருக்கிறார் மற்றும் அதைக் குறித்து அவர்கள் அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் நித்திரையில் இருப்பதாக, உழைப்பிலிருந்து ஓய்வு பெறுவதாக பேசப்படுகிறார்கள். "நீதியின் கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளில் அதை எனக்கு தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல" என்று அப்போஸ்தலர் அறிவிப்பது போல கிரீடத்திற்காக அவர்களும் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதே போல உலகத்தின் மனுக்குலம் இன்னும் அவர்கள் கர்த்தரை அறியாதிருந்தும் கூட "இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்கள்" என்று பேசப்படுகிறார்கள். ஏனெனில் முழு உலமும் ஆதாம் மூலமாக மரண தண்டனைக்குள்ளாக இருந்தது. தண்டனை கொடுக்கப்பட்ட சமயத்தில் அதில் தங்கள் பங்கை அறியாமல் ஆதாமின் அரையில் இருந்தனர். இப்பொழுது அனைவருக்காகவும் மீட்கும் பொருளாக தம்முடைய் ஜீவனை இயேசு கொடுத்ததால் அவர்கள் அனைவரும் மரணத்திலிருந்து எழுவார்கள். அவர்கள் அனைவரும் மரணத்திலிருந்து எழும்புவதால், உயிர்த்தெழுப்புகிற தெய்வீக ஏற்பாட்டை அறிந்தவர்கள், விசுவாசத்தினால் இடைக்காலத்தை நித்திரையில் இருப்பதாக அடையாளமாக பேசுகிறார்கள். மரணத்தின் சிறை வீட்டிற்கு செல்லுகிற நமது அனைத்து நண்பர்களும் உயிர்த்தெழுவார்கள் என்று நம்பிக்கை கொள்ள வேண்டும் என்று அப்போஸ்தலர் நமக்கு வலியுறுத்துகிறார். கிறிஸ்து இயேசுவில் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் மாத்திரமல்ல, நாம் வருத்தப்பட விரும்புகிற சில பேரும் உள்ளடங்கியிருக்கி -றார்கள். அவர் கூறுகிறதாவது: "சகோதரரே, நித்திரையடைந்தவர்களி -னிமித்தம் (மரித்திருக்கிற நம்முடைய நண்பர்கள் அனைவரும்) நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. இயேசுவானவர் (மீட்கும் பொருளாக எல்லாருக்காகவும்) மரித்து பின்பு (கர்த்தராகவும் ஜீவனை கொடுப்பவராகவும்) எழுந்திருந்தார் என்று விசுவாசிக்கிறோமே. அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் (தம்முடைய விலையேறப் பெற்ற இரத்தத்தினால் வாங்கப்பட்ட அனைவரும்) தேவன் அவரோடு கூட (மரணத்தின் சிறை வீட்டிலிருந்து) கொண்டு வருவார்."

### பொதுவான உயிர்த்தெழுதல் நியாயந்தீர்ப்புக்காக எழுப்பப்படுகிறது

முதலாம் உயிர்த்தெழுதல் என்பது கிறிஸ்து இயேசுவினால் பரிசுத்தமாக்கப்பட்ட, ஆசீர்வதிக்கப்பட்ட பரிசுத்தராகிய அவரது சரீரத்துக்கானது. உலகத்திற்கான பொதுவான உயிர்த்தெழுதல் நியாயந்தீர்ப்பிற்கான உயிர்த்தெழுதல் ஆகும். இது பொதுவான மொழிபெயர்ப்பில் "ஆக்கினைக்கான உயிர்த்தெழுதல்" என்று தவறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அது "நியாயந்தீர்ப்புக்கான உயிர்த்தெழுதல்" என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் முழு மனுக்குலத்திற்கும் முழு உயிர்த்தெழுதலையும் அல்லது ஆதாமின் கீழ்ப்படியாமையினால் இழந்துபோனதையும் ஆதியில் ஆதாமுக்கு கொடுக்கப்பட்ட அனைத்தையும் திரும்பக் கொடுப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேவனைப் பொருத்தவரை செய்திருக்கிறார். இவையனைத்தும் இரட்சகரின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட வேண்டும். எனினும் அங்கே புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகள் இந்த ஆசீர்வாதங்களுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன.

நித்திய ஜீவனை விரும்பி, தெய்வீக அரசாங்கத்தின் பிரமாணமாகிய நீதியின் கொள்கைகளின் மேல் இருதய அனுதாபம் உடையவர்களைத் தவிர வேறு யாருக்கும் கிறிஸ்து மூலமாக நித்திய ஜீவனை அளிக்க தேவன் நோக்கம் கொண்டிருக்கவில்லை. ஆகையால் உலகமானது மரண நித்திரையிலிருந்து எழுந்திருக்கும்போது, அது உயிர்த்தெழுதலை குறிக்காது, அதைவிட குறைவானதைக் குறிக்கும். ஏனெனில், அதன் முழுமையான வேத வாக்கியங்களின் அர்த்தத்தில், பாவம் மற்றும் மரணத்தை விட்டு பூரண ஜீவியாக, பூரண ஜீவனில் முழுமையாக எழும்பி வருவதைக் குறிக்கிறது.

கிறிஸ்து மற்றும் சபைக்கு உலகத்தில் முதல் வேலை, சிறைக்கு மரணத்தில் இறங்கியிருக்கிறவர்களை, அவர்களை மரிக்கும்போது இருந்த அதே நிலையில் உயிரோடு எழுப்புதலாகும். சமூகத்தின் சுற்றுப்புற சூழ்நிலைகள் அப்பொழுது முன்னேறியிருக்கும். அறியாமையின் இடத்தை அறிவு எடுத்துக்கொள்ளும். அந்த சமயத்தில் நீதியின் ஆளுகையும் அன்பின் பிரமாணமும், சயநலத்தின் பிரமாணத்தின் கீழ் பாவத்தின் ஆளுகையை முறியடிக்கும். ஆயிர வருட யுகத்தில் சாத்தான் ஜாதிகளை மோசம் போக்காதபடி கட்டப்படுவான். மத்தியஸ்த ஆளுகையின் சாதகமான நிலைமைகளின் கீழ் மனுக்குலம் முழுவதும், கர்த்தரைப் பற்றிய அறிவில் முன்னேறவும் தங்களுடைய இருதயங்களையும் வாழ்க்கைகளையும் அவரது அன்பின் பிரமாணத்திற்கு இசைவாகக் கொண்டு வரவும் எதிர்பார்க்கப்படும். சரியான திசையில் தங்களை கொண்டு செல்ல முயற்சிக்காதவர்கள் நூறு ஆண்டுகள் சோதனைக்குப் பின் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள். (ஏசாயா 65:20) அப்படிப்பட்டவன் மாற்றப்பட்ட நிலைமையில் வாலிபன் எண்ணப்படுவான்.

முன்னேற்றம் அடைவதில் தோல்வியடைகிறவர்களுக்கு எதிரான நியாயத்தீர்ப்பு இப்படியாக இருக்கும்போது மேலும் அவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படாது. நீதியை நாடி, ராஜ்யத்தின் பிரமாணங்களுக்கு இசைவாக முன்னேற்றம் அடைகிறவர்களுக்கு சாதகமாக அதே நியாயத்தீர்ப்பு, அதே நியாயதிபதி மூலம் கிரியை செய்யும். ஆகையால் வருடா வருடம் அவர்கள் மனதின்படி, சரீரத்தின்படி, ஒழுக்க நீதியாக பலமடைந்து முன்னேறுவார்கள். தகப்பனாகிய ஆதாமின் பூரண முழுமையான மனித நிலைமைக்கு, தேவன் சிருஷ்டிக்கும் போது இருந்த தேவனுடைய சாயல் மற்றும் ரூபத்திற்கு படிப்படியாக முன்னேறுவார்கள். இப்படியாக உலகத்தைப் பொறுத்த வரையில் உயிர்த்தெழுதல் என்பது படிப்படியான ஒரு வேலையாக இருக்கும். முதல்படி, இல்லாமை மற்றும் நினைவற்ற நித்திரையிலிருந்து எழுப்புதல் ஆகும். அதன் தொடர்ச்சியான படிகள் நியாயத்தீர்ப்பின் திசையில் இருக்கும். சோதனையில் இருப்பவர்களுடைய நடத்தைகள் அங்கீகரிக்கப்படும் அல்லது அங்கீகரிக்கப்படாது. அவர்களுக்கான தீர்ப்பு தேவனுடைய வெகுமதிக்கு நித்திய ஜீவனுக்கு அபாத்திரராக, திருத்த முடியாதவர்களாக இரண்டாம் மரணத்திற்குரிய -வர்களாக இருப்பார்கள் அல்லது அவர்களது பூரணத்தில், அப்பொழுது பரவியிருக்கும் என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதமான நிலைமையின் கீழ், அவர்களது இறுதியான தகுதி மூலம் மாபெரும் வரமாகிய நித்திய ஜீவனை பெற்று அனுபவிப்பார்கள். அப்பொழுது துக்கம் இராது, மரணம் இராது, அலறுதலுமிராது. ஏனெனில் இனி பாவமும் பாவத்தின் தண்டனையும் இராது. ஏனெனில் முந்தினவைகள் எல்லாம் ஒழிந்து போகும். (வெளி. 21:4)

### மரித்த நிலைமை ஒரு நித்திரையாக பேசப்படுகிறது

மரித்த அனைவரின் நிலைமையும் உயிர்த்தெழுதலின் நேரம் வரும் வரை முழுவதும் ஒன்றும் அறியாத நிலைமைதான். "நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே;" "அவன் பிள்ளைகள் கனமடைந்தாலும் உணரான்; அவர்கள் சிறுமைப்பட்டாலும், அவர்களைக் கவனியான்." கடந்த கால முற்பிதாக்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் எழுதப்பட்டிருப்பவை: "தாவீது தன் பிதாக்களோடே நித்திரையடைந்தான்." "சாலோமோன் தன் பிதாக்களோடே நித்திரை அடைந்தான்." புதிய ஏற்பாட்டிலும் இதே போல பதிவு செய்யப்பட்டிருக்கிறது. "ஸ்தேவான் நித்திரை அடைந்தான்." கர்த்தர் உயிர்த்தெழுந்த பிறகு அவரை பார்த்தவர்களைக் குறித்து அப்போஸ்தலர் பவுல் நறுகிறதாவது: "அவர் ஐந்நூறு பேருக்கும் அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில்

தரிசனமானார்; அவர்களில் அநேகர் இந்நாள் வரைக்கும் இருக்கிறார்கள். சிலர் மாத்திரம் நித்திரையடைந்தார்கள்;" மறுபடியும் அவர் "கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்த" சிலரைக் குறித்து பேசுகிறார். (கிறிஸ்து என்பது புது சிருஷ்டியாக நமது கர்த்தருக்கும் அவரது ஸ்தானத்திற்கும் பெயர். இயேசு என்பது இரட்சகரின் பெயராக இருக்கிறது. அவரது பலியின் மூலமாக எல்லா மனுஷருக்கும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழும் சந்தர்ப்பம் வருகிறது) இங்கே கிறிஸ்துவுக்குள் இருக்கிற சபைக்கும், "இயேசுவுக்குள் நித்திரையடைந்த" பொதுவான உலகத்தின் மனுக்குலத்திற்கும் வித்தியாசத்தை காண்பிக்கிறார். (பிரசங்கி 9:10; யோபு 14:21; 1 ராஜாக்கள் 2:10; 11:43; அப்போஸ்தலர் 7:60; 1கொரிந்தியர் 15:6,18; 1தெசலோனிக்கேயர் 4:14)

இந்த நித்திரை நிலைமை, சபைக்கும் கூட கிறிஸ்துவின் இரண்டாம் வருகை காலம் வரைக்கும் என்று அப்போஸ்தலர் காண்பிக்கிறார். கர்த்தரின் இரண்டாம் வருகையின் சமயத்தில் உயிரோடு இருக்கும் சபை அங்கங்கள் நித்திரை அடைந்தவர்களுக்கு முந்தி ஆசீர்வதிக்கப்பட மாட்டார்கள். ஆனால் மாறாக, உயிரோடிருப்பவர்கள் "நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்ளுவதில்லை." ஏனெனில் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பிறகு உயிரோடிருக்கும் நாமும் ஆசீர்வதிக்கப்பட்டு இறுதியாக நமது "மறுரூபமடைதலை" அனுபவிப்போம்.

### "நீ விதைக்கிற போது இனி உண்டாகும் மேனியை விதைக்கவில்லை"

உயிர்த்தெழும் அந்த கணத்தில் அவர்களது நிலைமை மரணம் அடைந்த அடுத்த கணத்தில் இருப்பது போல காணப்படும். எனெனில் "பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லை." உலகத்தார் உயிர்த்தெழும் சரீரம் அவர்கள் மரிக்கும் போது இருந்த சரீரத்தைப் போலவே இருக்கும். எனினும் அதே அணுக்கள் இருக்காது. ஏனெனில் தேவனின் கைகளில் மண்ணில் ஒரு துகள் (அணு) இந்த மாபெரும் வேலையில் இன்னொரு துகளைப் போல நல்லதாகவே இருக்கும். இப்படியாக அப்போஸ்தலர் கூறுகிறார்: "நீ விதைக்கும் பொழுது இனி உண்டாகும் மேனியை விதைக்கவில்லை." உலகத்தார் உயிர்த்தெழும் போது அவர்களது சரீரமானது புதிய சரீரமாக இருக்கும். அதாவது அதன் அணுக்கள் எல்லாம் வேறு அணுக்களாக இருக்கும். ஆனால் அவை பழைய சரீரமாக இருக்கும். அதாவது மரித்து மண்ணுக்குச் சென்ற சரீரங்களின் நகலாக (duplicate) இருக்கும். தேவனையும் அவருடைய வல்லமையையும் உயிர்த்தெழுதலின் காரியத்தை உலகத்தின் சிந்தை அறியாதிருப்பது ஆச்சரியம் அல்ல. அது மனிதனுடைய ஆதி சிருஷ்டிப்பைக் காட்டிலும் மிகவும் அற்புதமானதும், மிகவும் ஆச்சரியமானதுமாக இருக்கும். இப்படியாக அது உலக மனுக்குலத்திற்கும் பரலோக தூதர்களுக்கும் கூட இருக்கும். அது சர்வ வல்லமையுள்ள தெய்வீகத்தின் எப்பொழுதுக்குமான மாபெரும் கண்காட்சியாக இருக்கும்.

ஆதியிலே தமது ரூபத்தின்படியும் தமது சாயலின்படியும் பூமியின் மண்ணிலிருந்து மனிதனை உண்டாக்கிய அவர், மறுபடியும் பூமியின் மண்ணிலிருந்து உருவாக்கி ஜீவ ஆவியை கொடுக்க வல்லமையுடையவராயிருக்கிறார். அவர்கள் ஒவ்வொருவரையும் தற்காலத்தில் உள்ள மூளையுடன் மறுசீரமைப்பதில் தமது சர்வ வல்லமையையும் அளவில்லா ஞானத்தையும் காண்பிப்பார். அந்த மூளையில் தற்கால வாழ்க்கையில் வெளிப்பட்ட காரியங்களையும் சூழ்நிலைகளையும் வேறு நேரத்திலும் வேறு இடத்திலும் காண்பதற்கு போனோ கிராமிய பதிவு செய்வது போல பதிவு செய்வார். கோடிக்கணக்கானவரின் சிந்தனைகளை சரியானபடி திருப்பிக் கொண்டு வரக்கூடிய வல்லமையை எல்லையில்லா சர்வ வல்லவரால் மட்டுமே முடியும். நம்முடைய தலையிலுள்ள முடியெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது என்றும் அவருக்கு தெரியாமல் ஒரு குருவிக்கூட தரையில் விழாது என்றும் சொன்னவரே அவர். அவர் மட்டுமேஇப்படிப்பட்ட ஆச்சரியமான ஒரு காரியத்தைச் செய்யக்கூடும். அவருடைய வார்த்தையினால் வெளிப்படுத்தப்பட்டவைகள் மூலமாக நாம் அவரில் நம்பிக்கை வைக்க கற்றுக்கொண்டிருப்பதால் மட்டுமே, நிகழ்த்தப்படும் என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அப்படிப்பட்ட அற்புதமான அதிசயத்தில் நம்பிக்கை வைக்க முடியும்.

உலக மனுமக்கள் அனைவரும் ஒரே நேரத்தில் எழும்பி வருவார்கள் என்று நாம் எதிர்பார்க்கத் தேவையில்லை. மேசியாவின் ராஜ்யத்தில் ஆரம்பிக்கப்படும் முதல் வேலை, கல்லறைக்கு செல்லாதிருக்கிற, ஆனால் மரணத்தில் இருக்கிற, அதாவது முழுமையாக ஜீவனோடு இராதவர்களிடம் மரணத்தின் வல்லமையிலிருந்து முழு விடுதலை ஆரம்பிக்கும். இவர்களிடம் திரும்பக் கொடுத்தலின் வேலை ஓரளவுக்கு நடக்கும்பொழுது, இதற்கு முன் மரண நித்திரைக்குச் சென்ற சிலர் எழுப்பப்படுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கலாம். அவர்கள் மகிமையான நாளின் ஆசீர்வாதத்தில் பங்கு பெறுவார்கள். பிறகு மற்றவர்கள் இன்னும் மற்றவர்கள் எழும்புவார்கள். முடிவாக, அந்த நாளில், கிறிஸ்துவின் நாளில் "பிரேதக்குழியிலுள்ள அனைவரும் மனுஷகுமாரனுடைய சத்தத்தை கேட்டு;" "புறப்படுவார்கள்." அவர்கள் நன்மை, அன்பு, தேவனுடைய இரக்கம் இவற்றின் அறிவுக்குள் கொண்டு வரப்படுவார்கள். அவர்கள் முடிவில் மனுக்குலத்தின் பூரணத்திற்கு வந்தால் இந்த சமயத்தில் பூமியானது அவரது மீட்கப்பட்ட மானிட வம்சங்களுக்காக தேவனுடைய பரதீசாக தயார்படுத்தப்படும்.

இந்த சமயத்தில் இந்த யுகத்தில் "அழைக்கப்பட்ட" அனைவரும், ராஜ்ய வகுப்பாரின் ஒரு இடத்திற்கு, ஒரு சுபாவ மாறுதலுக்கு, மானிட தெய்வீக சுபாவத்திற்கு, தெய்வீக ஏற்பாடுகளின் கீழ் கனம், மகிமை மற்றும் சாகாமையுடனான தெய்வீக சுபாவத்திற்கான பூரணத்திற்கு நம்முடைய "அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்த" நாட வேண்டும் என்பதே உபதேசமாக இருக்கிறது.

---


ஏழாம் சபையின் தூதனாகிய

சகோ.C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்

வெளியிடுபவர் :



சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,

எண். 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை - 600 019.

கைபேசி : 97909 00030. மின்னஞ்சல் : mbsaselvaraj@gmail.com

Website : www.thestudiesinthescriptures. com



**FOR PRIVATE CIRCULATION ONLY**